பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 14 ஏப்ரல் 2018 | விதி : 96




மாவைக்கு ஒரு கடிதம்




காவிரி என்பது
வெறும் நீரல்ல!



தேசிய அணியில்
வடக்கின் மூன்று
முத்துக்கள்



நெடுந்தீவு



# சவாலுக்கு உட்படுத்தப்படும் சர்வ வல்லமை

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தின் ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் படத்தில் வில்லனாக பிரபல பொலிவுட் நடிகர் நவாசுதின் சித்திக் நடிக்கவுள்ளார்.

ரஜனி, சித்திக்கை சுற்றியே திரைக்கதை உள்ளதால், படம் சுவாரஸ்யமாக இருக்கும் என்பதுடன் இருவரும் மோதும் காட்சிகள் ஹைலட்டாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.





'பாபநாசம்' படத்தில் மகளாக நடித்துப் பிரபலமானவர் நிவேதா தோமஸ். பட்டப்படிப்பை தொடர்ந்து வந்தவர் திடீரென நடிப்பை நிறுத்திவிட்டு ஒதுங்கினார்.

6 மாதம் நடிப்புப் பக்கம் திரும்பாமல் படிப்பிலேயே கவனம் செலுத்தியவர், பரீட்சை முடிந்து இப்போது சினிமா பக்கம் கவனம் செலுத்தியுள்ளார்.

சில இயக்குநர்கள் என்னை சந்தித்துக் கதை கூறியுள்ளார்கள். விரைவில் புதிய படம் பற்றி அறிவிப்பேன் என அவர் தனது ரசிகர்களுக்குக் கூறியுள்ளார்.



காவிரி மேலாண்மை சபையை அமைக்க வலியுறுத்தியும், தூத்துக்குடியில் அமைக்கப்படும் ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறும் பெரும்போராட்டங்கள் தமிழ்நாட்டில் இடம்பெறுகின்றன.

தென்னிந்திய நடிகர் சங்கம் நடத்திய கண்டனப் போராட்டத்தில் நயன்தாரா, த்ரிஷா, சமந்தா, கீர்த்தி சுரேஷ் என முன்னணி நாயகிகள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை.

அறம் படத்தில் தண்ணீருக்காக போராடிய பாத்திரத்தில் நடித்தவர் நயன்தாரா. 15 வருடங்கள் தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையான அவருக்கு எதிராகக் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

அண்மையில் மரணமான நடிகை ஸ்ரீதேவியை கௌரவிக்கும் விதத்தில் 'ஜீ அப்ஸரா' விருது உருவாக்கப்பட்டது. முதல் விருது தமன்னாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமன்னா தற்போது 'கண்ணே கலைமானே', 'நா நுவே', 'க்வீன் ஒன்ஸ் எகைன்' படங்களில் நடித்து வருகிறார்.



## சவாலுக்கு உட்படுத்தப்படும்


# சர்வ வல்லமை

■ யோக நாராயணன்

இலங்கையின் நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் வரலாறு இரு பெரும் சர்வவல்லமையுள்ள அரசியல்வாதிகளைச் சந்தித்துள்ளது. அவர்கள் செய்யும் எந்தக் காரியங்களையும் கேள்விக்கு உட்படுத்த முடியாதளவுக்கு அதிகாரம் கொண்டவர்களாக விளங்கினார்கள். அப்படி யாராவது கேள்வி எழுப்பினாலோ விமர்சனம் செய்தாலோ ஒன்றில் அரசியலிலிருந்து ஓரங் கட்டப்படுவார்கள் அல்லது இனம் தெரியாதவர்களால் படு கொலை செய்யப்படுதல், காணாமற் போதல் போன்ற அச்சுறுத்தல்களுக்கு உள்ளா வார்கள் என்ற நிலையே நிலவியது. எனவே அவர்கள் தட்டிக் கேட் கப்பட முடியாதவர்களாகத் தலையாட்டிகள் புடை சூழத் தாங்கள் நினைத்ததை நடத்தி வந்தனர்.

ஒருவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. இவர் பிரதமராக, ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் சரி, எதிர்க் கட்சியில் இருந்தபோதிலும் சரி பெரும் ஆளுமையும் அதிகாரமும் கொண்ட தலைவராக விளங்கினார். புதிய அரசியலமைப்பின் மூலம் சர்வ வல்லமையுள்ள நீதிமன்றத்தால்கூட விசாரிக்கப்பட முடியாத ஜனாதிபதியாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர். அடுத்தவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, "கல்லுளி மங்கன் போற வழி காடுமேடெல்லாம் தவிடுபொடி" எனத் தமிழில் ஒரு பழமொழி உண்டு. அவ்வாறான ஒரு கல்லுளி மங்கனாக விளங்கி, தான் நினைத்தவை அனைத்தையும் நடத்துமளவுக்கு தன்னிடம் அதிகாரத்தைக் குவித்து வைத்தவர். தான் எதிர்பார்த்த தீர்ப்பை வழங்க மறுத்த தலைமை நீதியரசரையே வீட்டுக்கு அனுப்புமளவுக்கு சட்டம் நீதியைக் கூடக் கையில் எடுத்தவர்.

தமிழ் மக்கள் மீது ஒரு கொடிய இன அழிப்புப் போரைக் கட்டவிழ்த்து விட்டதுமின்றி அதை நியாயப்படுத்தி வந்ததுடன் அதை ஒரு மாபெரும் சாதனையாகக் காட்டி சிங்கள மக்களின் தனித்துவமான தலைவனாக ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கியவர். அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், சிறையிலுள்ள கைதிகள், குடிதண்ணீர் கேட்டுப் போராடியவர்கள் என அவரது அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கியவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர். எல்லாவற்றையும்விட மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளை உதாசீனம் செய்து இலங்கையைச் சீனாவின் தாலாட்டில் வளர்த்தவர். தற்சமயம் அதிகாரம் இழந்துவிட்ட நிலையிலும் ஆட்சியிலுள்ள அரசியல்வாதிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வருகிறார். நேரடியாக எந்தவொரு அரசியல்வாதியும் மோதவோ, அவர் மேல் நடவடிக்கை எடுக்கவோ முடியாதளவுக்கு அவர் சக்தி பெற்றே திகழ்கிறார்.



இவ்வாறே தமிழ் மக்களின் ஜனநாயக அரசியலிலும் ஒருவர் தன்னை ஒரு சர்வவல்லமையுள்ள சக்தியாக உருவாக்கி வருகிறார். அந்த நோக்கம் இன்னும் முழுமைபெறாவிட்டாலும், பெருமளவு வெற்றி பெற்றுவிட்டது போலவே தோற்றமளிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளையே தலைகீழாகப் புரட்டிப் போடுமளவுக்கும், தலைமைகளின் கருத்துக்களை மீறித் தான்தோன்றித்தனமாகச் செயற்படுபவராகவும் தலைமையால் தட்டிக் கேட்கப்பட முடியாதவராகவும் அவர் தன்னை ஒரு சர்வவல்லமையுள்ள அரசியல் வாதியாக உருவாக்கி வருகிறார்.

அவர் தான் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல சட்டத் தரணியுமான சுமந்திரன், 2010 ஆம் ஆண்டுத் தேர்தலை அடுத்து நியமனப் பட்டியல் உறுப்பினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இரா. சம்பந்தனால் உட்புகுத்தப் பட்டவர்தான் மஹிந்த ராஜபக்சவின் குடும்ப நண்பரான சுமந்திரன். அவர் வந்ததும் வராததுமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சம்பந்தனுக்கு நிகரான சில சமயங்களில் அதை விடவும் கூடுதலான அதிகாரம் கொண்டவராகத் தன்னை அவர் வடிவமைத்துக் கொண்டார். அதற்கு சம்பந்தனின் ஆசியும் வழங்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி காலத்திலிருந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களில் உறுதியாகப் பங்கெடுத்தவரும் பதினொருமுறை சிறைசென்றவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்தாபக உறுப்பினரில் ஒருவருமான மாவை சேனாதிராசாகூட இப்படியொரு மேலாண்மை உருவாவதற்குத் தலையாட்டி வழிவிட்டார்.

இப்படியாகச் சுமந்திரன் தனது சர்வவல்லமைப் போக்கை நிலைநிறுத்தி வந்த சுமந்திரன் அண்மையில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தொடர்பாக வெளியிட்ட கருத்து சர்ச்சையை உருவாக்கியது மட்டுமின்றி அவரின் சர்வ வல்லமைக்கு வலுவான அடியை முதலமைச்சர் கொடுக்க வேண்டிய நிலையையும் ஏற்படுத்திவிட்டது. சி.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட முன்வந்தபோது, இரண்டு வருடங்கள் மட்டுமே அப்பதவியில் இருக்கச் சம்மதித்தார் எனவும், எனவே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அவர் விரும்பமாட்டார் எனவும் அதனால் எதிர்வரும் தேர்தலில் மாவை. சேனாதிராசாவே நிறுத்தப்படுவார் எனவும் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கட்சி அப்படியொரு முடிவை எடுக்காத நிலையில் சுமந்திரனின் இப்படியொரு கருத்தைக் கண்டிக்கத் துணிவின்றி, முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதைப் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முறையில் முடிவெடுக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார். ஆனால், முதலமைச்சர் இந்த விடயத்தை அவ்வளவு இலகுவாக எடுக்கவில்லை. உடனடியாகவே பதிலடி கொடுத்துள்ளார். அவர் தனது அறிக்கையில், முடுக்கிவிடப்பட்ட இயந்திரப் பொம்மைகள். முடுக்கியவர் முன்மொழிவுகளுக்கு ஏற்ப வட மாகாண சபையிலே கூத்தாட்டத்தில் ஈடுபட்டபோது இவ்விடயம் முதல்முதலில் பேசப்பட்டது.

ஆனால், அப்பொழுதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் மத்தியில் குடிகொண்டிருந்த சர்வாதிகாரப்போக்கு வெளிவந்திருந்தது. கூட்டமைப்பு கூட்டாகத் தீர்மானமெடுத்ததைக் காண்பது அரிது என ஒரு உண்மையை அப்பட்டமாக வெளியிட்டுள்ளார். வட மாகாண சபையில் முதலமைச்சரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட சில சதி முயற்சிகளில் ஐங்கரநேசனும், குருகுலராஜாவும் பலிக்கடாவாக்கப்பட்டமையை நாம் மறந்துவிடமுடியாது. மேலும், அவர் "எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, படுகொலைகளை, போர்க் குற்றங்களை எல்லாம் யாருக்கோ உதவி செய்யும் நோக்கில் எம்மவர் சிலர் மறைக்க முற்படுவதுபோல் என்னால் மறைக்கமுடியாது. உண்மையை உலகம் உணர வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு என்ற அவரின் கூற்று சுமந்திரன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உப குழுக் கூட்டங்களிலும், மேற்குலகப் பிரதிநிதிகளிடமும் இலங்கை அரசைக் காப்பாற்றும் வகையில் மேற்கொண்ட முயற்சிகளை அம்பலப்படுத்துகிறது.

ஒட்டுமொத்தத்தில் முதலமைச்சரின் அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கையைவிட்டு தடம் புரண்டு விட்டது என்பதையும், அதன் சூத்திரதாரி சுமந்திரன் என்பதையும் அவரை இயக்கும் சில சக்திகள் என்பதையும், தலைமை அவரை மீறிச் செயற்பட மாட்டாது என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளையில், தமிழ் மக்கள் மத்தியிலும் இப்படியான புரிதல் உண்டு என்பதும், அதன் வெளிப்பாடே கடந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகள் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தேர்தலின் பின்பு சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெற்று வருவது மேலும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை அதிகரித்துள்ளது. சில த.தே. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் பகிரங்கமாகவே தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே முதலமைச்சர் சர்வ


(19ஆம் பக்கம் பார்க்க)

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

















உண்மையான அன்பும் உண்மையான
பசியின் வலியும் என்னவென்று
இவர்களிடம் கேட்டு பார்த்தால் தெரியும்
இவர்களின் போராட்டத்திற்கு முன்
உங்களின் போராட்டம் ஒன்றும்
இல்லை


















புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# பேராபத்தில் தள்ளப்படும் தமிழ்த் தேசிய அரசியல்

ஈழத் தமிழரின் அரசியலில் பெரும் திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. ஆனால் இதனைத் திருப்புமுனை என்று கூறுவதை விட தமிழ்த் தேசிய அரசியலுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது எனக் கூறுவதே பொருந்தும். இந்தப் பேராபத்துக்குக் காரணம் தமிழ் மக்களின் பேராபிமானத்தைப் பெற்றவரும் - வடக்கு முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகி வேறொரு பாதையில் தனது அரசியல் பயணத்தைத் தொடரப் போகிறார் என்பதே.

வடக்கு அரசின் ஆயுள் வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிகிறது. நாட்டின் ஏனைய மாகாண சபைகளுடன் சேர்த்து வடக்குக்கான தேர்தலையும் நடத்திவிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தேர்தலையும் தொகுதி - விகிதாசாரக் கலப்புத் தேர்தலாக நடத்தவே முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சகல கட்சிகளும் வாங்கிய அடியால் தேர்தல் முறைமையை மீண்டும் பழைய முறைமைக்கு மாற்றுவது குறித்து அனைத்துக் கட்சி களையும் சிந்திக்க வைத்துள்ளது.

இவ்வாறான நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சுமந்திரன் தரப்பு - விக்னேஸ்வரன் தரப்பு எனக் காணப்பட்ட உட்பிளவு, பிரிவாக மாறியிருக்கிறது. இந்தப் பிரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்பை - நிலைத்திருப்பை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. ஏனெனில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வேறொரு பாதையைத் தெரிந்து செல்வாரேயானால், புதியதொரு கூட்டணி உருவாவதற்கான வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டார்கள். இதனைக் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் எடுத்துக் காட்டியது.

காலத்துக்குக் காலம் இடம்பெற்ற பிளவுகளாலும் அரசாங்கத்துடன் இணைந்து - மண்டியிட்டு தொடரும் அரசியல் பயணத்தாலும், தமிழ்த் தேசியத்தின் பரம வைரிகளான ஈ.பி.டி.பி. மற்றும் சிங்கள தேசிய கட்சிகளின் தயவில் உள்ளூராட்சி சபைகளில் அமைத்த ஆட்சியாலும் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பை நிறையவே சம்பாதித்துவிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இவ்வாறான நிலையில் மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்ற தலைவர் ஒருவர் பிரிந்து செல்வது அதன் அரசியல் இருப்பையே கேள்விக்கு உட்படுத்துவதாகிவிடும். தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி வரும் காலத்திலும் ஈ.பி.டி.பி., சிங்கள தேசியக் கட்சிகளின் தயவை நாட வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

இந்நிலையில் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டணி ஏற்படுவது சரி. அதற்கு தலைமை தாங்கும் நிலையில் அவர் உள்ளாரா? என்ற கேள்விதான் இங்கு முக்கியமாக எழுகிறது. விக்னேஸ்வரன் கறை படியாத கரங்களின் சொந்தக்காரர்தான். ஆனால் அவரின் கீழிருப்பவர்கள் அத்தகையவர்களா? அவர்களை அடக்கி தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் ஆளுமை முதலமைச்சருக்கு உள்ளதா? என்ற கேள்வியும் தவிர்க்க முடியாதது. சமரசத்துக்கு இடமில்லாத - விட்டுக் கொடுப்பு என்ற பேச்சே இல்லாத அரசியலை தனித்துச் செய்ய அவரால் முடியுமா? என்பதும் சந்தேகமே.

தென்னிலங்கைக்கும் அவருக்கும் நெருக்கமான உறவு உள்ளது. அதை அவர் எக்காரணத்தைக் கொண்டும் அரசியல் விடயத்தில் - தமிழர் நலனில் விட்டுக் கொடுப்புச் செய்ததில்லை. ஆனால் அவர் மீதான இந்தியாவின் அழுத்தம் அவரின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தக்கூடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருந்தாலும் சரி அல்லது புதிதாக ஏற்படவுள்ள எந்தத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக இருந்தாலும் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்லப்போவதில்லை. மீறிச் சென்றாலும் ஆபத்தில் முடியும் நிலையே உள்ளது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தாயகத் தாய் அன்னைபூபதி

■ நிலவன்



அன்னை பூபதி...
நெஞ்சில் பற்றி எரியும் இலட்சிய நெருப்புடன் உணவை ஒறுத்து, நீரை மட்டுமே அருந்தி ஒன்றல்ல, இரண்டல்ல, முப்பத்தொரு நாள்கள் மெல்ல மெல்ல தன்னை பட்டினித் தீயில் எரித்து சாவைத் தழுவியவள்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் யுத்த சன்னதமாடி, தமிழர் உரிமைக்காக ஆயுதம் தூக்கிப் புலியான இளைஞர்களை தேடித் தேடி அழிக்க முயன்றது. காடுகளை உறைவிடமாக்கிய விடுதலைப் புலிகளோ தம்மை அழிக்க முனைந்த படைகளுக்கு மரண அடி கொடுத்தனர். புலிகளை நெருங்க முடியாத இந்தியப் படைகள் தங்கள் இயலாமையை அப்பாவியான மக்களிடம் காட்டினர். இந்தியப் படைகளின் கொடூரங்கள் - வன்செயல்கள் - சித்திரவதைகள் - அடக்குமுறைகளால் தமிழர் தாயகத்தின் தெருவெங்கும் ஓலங்களும் - அவலக் குரல்களும் - அழுகுரல்களும் கேட்டன.

இதைப் பொறுக்க மாட்டாமல் மக்கள் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணி இரு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்தது.போர் நிறுத்தம் உடன் நடைமுறைக்கு வர வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே அக்கோரிக்கைகள். இவை எதையும் அந்நிய இந்தியப் படை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக அன்னையர் முன்னணியினரை கொழும்புக்கு அழைத்து புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்கக் கூறுமாறு மிரட்டியது. மிரட்டலுக்கு அடிபணியாத அன்னையர் முன்னணியோ, விடுதலைப் புலிகளே தமிழரின் பாதுகாவலர்கள் நீங்கள்தான் பேச்சுக்கு வரவேண்டும் எனக் கூறித் திருப்பினர்.

நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட அந்த அமைப்பு முடிவு செய்தது. இந்தப் போராட்டத்தில் ஈடுபடப் பலர் முன்வரவே குலுக்கல் முறையில் சாகும் வரையிலான உண்ணாவிரதம் இருப்பவரை தெரிவு செய்வது என முடிவானது. இதன்படி அன்னம்மா டேவிட் தெரிவானார். அவர் பெப்ரவரி 16 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அமிர்தகழி மாமங்கேஸ்வர் கோயிலில் (மாமங்கப் பிள்ளையார்) ஆரம்பித்தார்.

அகிம்சைப் போராட்டத்தை உலகறியச் செய்தவர்கள் தாங்களே எனத் தம்மைத் தாமே பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் இந்தியாவால் எங்கள் அகிம்சையைப் பொறுக்க முடியவில்லை. முன்னதாக தண்ணீர் கூட அருந்தாது தியாக தீபம் திலீபன் (1987 செப்ரெம்பர் 14-26) நடத்திய உணவு ஒறுப்புப் போரின் வெம்மை தாங்காது, மானம் இழந்து உலகின் முன் நிர்வாணமாக நின்ற இந்தியா இந்தப் போராட்டத்தை நடத்தவிடாமல் செய்யப் பெரும் திட்டங்களைத் தீட்டி தடைகளைப் போட்டது. இதற்காக மிகமிகக் கீழ்த் தரமான செய்கைகளில் இறங்கிய இந்தியப் படை அன்னம்மாவின் பிள்ளைகளையும் கணவரையும் கடத்தி மிரட்டியது. தொடர்ந்து உண்ணாவிரதப் பந்தலில் இருந்து அன்னம்மாவை கடத்திச் சென்று "கட்டாயத்தின் பேரிலேயே நான் உண்ணாவிரதம் இருந்தேன்" என்று எழுதி வாங்கியது. இதன் மூலம் எங்களின் அகிம்சைப் போரை அவமானப்படுத்த முனைந்தது.

இந்த நிலையில்தான் ஈழத்தின் பிள்ளைகள் எல்லோருக்காகவும் தன்னை ஆகுதியாக்க முன்வந்தாள் அன்னை பூபதி. "யாருடைய கட்டாயத்தின் பேரிலும் நான் உண்ணாவிரதம் இருக்கவில்லை. நான் மயக்கமடைந்தாலோ சுயநினைவை இழந்தாலோ எனது கணவரோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கக்கூடாது." என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு, மார்ச் 19 ஆம் நாள் அன்னம்மா டேவிட் வேள்வி வளர்த்த இடத்திலேயே தனது வேள்வித் தீயை மூட்டினாள். அந்தப் பட்டினிப் போரின் வெம்மையை இந்திய வல்லாதிக்காரர்களால் தாங்க முடியவில்லை. சாம, தான, தண்ட, பேதங்களை கையாண்டது ஆனாலும் அன்னையின் போராட்டத்தை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

மகாத்மா என்றும் அகிம்சா மூர்த்தி என்றும் காந்தியைக் கொண்டாடும் இந்தியர்கள் தங்கள் நாட்டின் தேசபிதாவாகவும் அவரேயே இன்றும் போற்றுகின்றனர். அவரின் அகிம்சைப் போராட்டமே தங்களுக்கு பிரித்தானியர்களிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது என்று கூறுகிறார்கள். அந்த காந்தியின் வழி வந்தவர்களால் எங்கள் அண்ணன் திலீபன், தாய் பூபதி தொடுத்த அகிம்சைப் போரை சகிக்க முடியவில்லை. மாறாக இந்தியர்களுக்கு பிரித்தானியர்கள் இழைத்த கொடுமைகள் - கொடூரங்களையும் விடப் பல மடங்கு அதிகமான கொடூரங்களையும் - அகிம்சைப் போராட்டம் நடத்தியோருக்கு எதிராகவும் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டனர். தன் பிள்ளைகளின் நல் வாழ்வே தன் வாழ்வு என எண்ணி தியாகத் தீயில் இறங்கிய அன்னையை அந்தத் துரும்பர்களால் என்ன செய்யமுடியும். முயன்று பார்த்தார்கள் முடியவில்லை.

அன்னையின் அகிம்சைப் போராட்டத்தின் சக்தி நாளுக்கு நாள் பெருகவே, காந்தியின் குரங்கு பொம்மைகள் போன்று கண், காது, வாய் பொத்தி எதுவும் தெரியாதவர்களாக நின்றார்கள் அந்தக் கயவர்கள். 31 நாள்கள் தன்னை எரித்த அந்தத் தாய் ஏப்ரல் 19 ஆம் நாள் ஈழத் தமிழரின் விடிவுக்காக தன்னை ஆகுதியாக்கினாள். அன்னை மூட்டிய அந்தத் தீயைக் கைகளில் ஏந்திய தலைவர் பிரபாகரன் இந்திய வல்லூறுகளை யுத்த களத்தில் எதிர்கொண்டார். போரில் தோற்று - வீரமிழந்து - அவமானப்பட்டு - தன் நாட்டுக்கு ஓடியது இந்தியா. பின்னாளில் அன்னை பூபதியின் நினைவு நாள் பேரெழுச்சியாகத் தமிழர் தாயகம் எங்கும் கடைப்பிடிக்கப்பட்டது.

வரலாற்றில் என்றும் நீங்கா இடம் பிடித்த தாயகத் தாயான அன்னை பூபதியின் நினைவு நாள் மீண்டும் பேரெழுச்சியாக நினைவுகூரப்பட வேண்டும். அதுவே, எமது போராட்டங்களுக்கு ஆத்ம பலத்தை அளிப்பதுடன் போராட்ட குணத்தையும் கூர்மைப்படுத்தும். இன்று கையறு நிலையில் நிற்கும் ஈழத் தமிழினம் தலைநிமிர என்றும் அன்னையின் ஆசி கிடைத்தவாறே இருக்கும்...!

# கனவு மெய்ப்படாது

## மாவைக்கு ஒரு கடிதம்



அன்புள்ள மாவைக்கு...!

வணக்கம்... வளமுடன் வாழ்க...!

முதலமைச்சரின் அதிரடிப் பேச்சுக்குப் பின்னர் நீங்கள் மட்டுமல்ல நாங்களுந்தான் கலங்கிப் போயிருக்கிறோம். அதுமட்டுமல்ல குழம்பியும் போயிருக்கிறோம். இத்தனை காலமும் அவர் வாயில்லாப் பூச்சி என்று வாளாது இருந்து விட்டோம்.`எங்கிருந்து அந்த மனுசனுக்குத் இத்தனை தைரியம் வந்ததென்று தெரியவில்லை. இப்படிச் சட்டென ஒரு குண்டைத் தலையில் தூக்கிப் போட்டு விட்டார். போட்டதோடு மட்டுமல்ல உங்கள் பக்கமிருந்த சில பலவீனங்களையும் பட்டென்று சொல்லியும் விட்டாரே? எப்படித் தாங்கிக் கொண்டீர்கள்? அதை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்? என்று சத்தியமாகக் கேட்கப்போவதில்லை. ஏனெனில் எப்படியோ சமாளிக்கக்கூடிய தைரியத்தை மாவைக் கந்தன் உங்களுக்குத் தந்திருப்பது எனக்குத் தெரியும். சமாளிப்பீர்கள் என்றாலும் பிரச்சினைகள் எல்லை கடக்கும்போதும் எந்த விண்ணனுக்கும் ஒரு தைரியக் குறைவு வருவது இயல்புதானே?

தற்போது வந்து கொண்டிருக்கும் செய்திகள் அத்தனைஆரோக்கியமானதாக இல்லை என்பதுதான் எனது அபிப்பிராயம். இதற்கு பிறரைக் குறை கூறுவதைவிட சரியாக ஆராய்ந்து பார்த்தால் அதற்கு நீங்களும் முழுப்பொறுப்பானவர் என்றே எண்ணத் தோன்றுகிறது. உங்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழருக்கும் தற்போது முக்கியமாகத் தேவைப்படுவது சிங்கள, தமிழ் மொழி அறிவு என்பது எனது எண்ணம். எமக்கிடையில் மூன்றாமவர் ஒருவர் தரகராக இருப்பதுதான் பல இடைஞ்சல்களை எமக்கு ஏற்படுத்திக் கொள்கிறது. தமிழையும், தமிழரையும் பொறுத்தவரை பெரும்பான்மையோடு உறவாட தமிழ், சிங்கள ஆற்றல் உள்ள ஒருவர் வேண்டும் என்ற நிலையில் அங்கே மூன்றாமவர் தேவைப்படுகிறார்.

இதே நிலைமையில்தான் நீங்களும் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்தானே? உங்களுக்கு இருக்கின்ற மொழி அறிவுப் பற்றாக்குறையை முன்வைத்துத்தானே சுமந்திரன் உள்ளே வந்தார் என்று கூறுகிறார்கள். ஆரம்பத்தில் அவரின் அரசியல் பிரவேசத்தைத் தாங்கள் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. அதற்குக் காரணம் தாங்கள் கொண்டுள்ள அரசியல் காலத்தை எண்ணி, தன்னம்பிக்கை அதிகம் கொண்டு தங்களை மீறி எதுவும் வராது என்ற எண்ணத்தில் அவரை கட்சிக்குள் அனுமதிப்பதை எதிர்க்காது இருந்துவிட்டீர்கள். ஆனால் அன்று அப்படி இருந்துவிட்டீர்கள் பரவாயில்லை. ஆனால் இன்றும், தலைக்கு மேல் வெள்ளம் போன பின்பும் அதேமாதிரி இருப்பதுதான் எனக்கு அதிக வேதனையைத் தருகிறது. ஏன் அப்படி அவரை முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டது போல இருக்கிறீர்கள்? என்பதில்தான் பலத்த சந்தேகங்கள் முளைவிடுகின்றன.

கடந்த 11 ஆம் திகதி மாலை என்று நினைக்கிறேன், கே.கே.எஸ். வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது இணுவில் மத்திய கல்லூரி வளாகத்தில் ஒரு கௌரவிப்புக் கூட்டத்தில் தாங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு வண்டியை நிறுத்தித் தங்கள் பேச்சைக் கேட்டேன். பாவம் இன்னும் அப்பாவிபோல கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு பேசியதையே இப்போதும் பேசிக் கொண்டிருந்தீர்கள். அங்கு கூடியிருந்த மக்களும் பாவம். அவர்களும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடந்த வாரம் ஒரு தினசரியைப் பாத்தேன். அதில் மாவையே அடுத்த வட மாகாண சபைக்கான முதல்வர் பதவிக்கு எங்கள் கட்சியின் சார்பில் போட்டி போடுவார் என்று சுமந்திரன் கூறியிருந்தார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்தப் பதவிக்கு, தான் போட்டி போடப் போவதாகச் சுமந்திரன் சொல்லி இருந்தார் எனப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. உண்மையில் வட மாகாண அரசியலில் என்ன நடக்கிறது? ஆளுக்காள் சேறு பூசுவதைத்தானே செய்து கொண்டிருக்கிறீர்கள். அரசியலில் பல காத தூரம் பின்னடைவை எதிர் கொணடதாகவே அனுபவம் சொல்லுகிறது.

முதலாவது வட மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது நீங்கள்தான் முதலமைச்சராக வந்திருக்க வேண்டியவர். என்ன அழுத்தமோ தெரியாது? அதைத்தான் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டீர்கள்? ஏன் கொடுத்தீர்கள் என்று தெரியவில்லை. ஆனால் அதற்கு இன்று ஆசைப்படுவது தெரிகிறது. கைக்கு வந்த சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு இன்னும் கனவு காண்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அடுத்து மகாணத்திற்கு ஒரு சந்தரப்பம் கொடுக்கிறோம் என்று ஊருக்குக் காட்டப்போய் தமிழ் அரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் என்ற பதவியையும் கைமாற்றிக் கொடுத்துவிட்டீர்கள். தலைவராக வந்திருக்கிறீர்கள். பொதுச் செயலாளராக இருந்திருந்து பல சாதனைகளைச் செய்திருக்கலாம். ஏன் அதையும் கோட்டை விட்டீர்கள் என்பது தெரியவில்லை. விட்டுக் கொடுப்பென்ற பெயரில் நீங்கள் பலவற்றை இழந்துவிட்டதாகவே நான் எண்ணுகிறேன். அரசியல் சாணக்கியம் என்பது விட்டுக் கொடுப் பதிலும் உண்டு என்பது உண்மைதான். ஆனால் முக்கியமான விடயங்களையும், மீளப்பிடிக்க முடியாத பதவிகளையும் விட்டுக் கொடுப்பதில் சிரத்தையுடன் நடந்திருக்கவேண்டும். எனவே பலதை விட்டுக் கொடுத்து பலவீனமானவராக இருக்கிறீர்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இன்னும் காலம் தாழ்ந்துவிடவில்லை. உடனடியாக சில அதிரடி நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கலாம். நீங்கள் எண்ணுவதுபோல அரசியல் அன்று இருந்தது போலல்லாது பல படிகளைத் தாண்டி உருமாற்றம் பெற்றிருக்கிறது. பழமைகள் மறந்து பல புதுமைகள் புகுந்து கொண்டிருப்பதால் அதற்கு ஏற்றவாறு நீங்களும் உங்களை இற்றைப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள் இருக்கிறீர்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைக்ளுக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்றவாறு உங்கள் கட்சியை வைத்திருக்க வேண்டுமா? அல்லது தங்கள் கட்சிக்குள் இருக்கும் தனிமனித வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தந்து மக்களைப் புறந்தள்ளப் போகிறீர்களா? ஒரு தனிமனித ஆதிக்கம் தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை நல்ல தரவுகளைத் தரும் என்றதில் எனக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் பொது நிறுவனம் என்ற விடயத்தில் தனிமனித ஆதிக்கம் பல விடயங்களைப் புறந்தள்ளிவிடலாம். கணிசமான அளவிற்கு அந்த நிறுவனம் உறுப்பினர்களை அல்லது வாடிக்கையாளர்களை இழந்துபோகலாம். எனவே உங்கள் கட்சியும் ஒரு பொதுநோக்குடன் மக்களுக்கு அரசியல் செய்யவெனத் தோற்றுவிக்கப்பட்டதொரு நிறுவனம். அதில் உறுப்பினர்கள் திருப்தி என்பதே முக்கியம். ஆகவே அத்தகையதாக முக்கியப்படுத்தப்படும் உறுப்பினர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்துமாறு ஏதாவது விடயங்கள் நடைபெற்றால் - அது பற்றி விசாரணை செய்து அதை நிவர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு உங்களுடையது. ஆனால் அந்த முக்கிய விடயங்களில் நீங்கள் அக்கறையற்றவராக அல்லது அதைக் கண்டுகொள்ளாது கடந்து செல்ல நினைப்பது மிகவும் ஆச்சரியத்தைத் தரவல்ல ஒரு விடயமாக எனக்குத் தோன்றுகிறது. பல ஊடகங்கள், பல தனிநபர்கள், பல கட்சி உறுப்பினர்கள் அத்தகைய குறைபாட்டைக் கண்டு, அதைச் சுட்டிக் காட்டிய பின்பும் “செவிடன் காதில் ஊதிய சங்காக” பாசாங்கு பண்ணுவது ஏன்? எனப் புரியவில்லை!

கட்சிக்குள் தனிமனித ஆதிக்கத்தை வளர விடுவது அல்லது கட்சியின் நடவடிக்கைகளிலும், தீர்மானங்களிலும் அவரின் எண்ணங்களும், ஆசைகளும், அவர் சார்ந்த விடயங்களும் முன்னிலைப்படுத்தப் படுவது மிகவும் பயங்கரமானதொரு திசையை நோக்கி உங்கள் பயணத்தைத் திசைதிருப்பலாம். பாதாளத்தில் கொண்டு சென்று விடலாம். எனவே அத்தகையவர்களை வெளியேற்றி ஒரு அதிரடி நடவடிக்கையை எடுப்பது நல்லது என்று எண்ணுங்கள். தற்போது தோன்றியுள்ள சூழலில் மக்களால் தமிழ் அரசுக் கட்சிக்குள் வந்து நுழைந்து மேய்கின்ற அந்தக் “கறுத்த ஆடு” எது என இனங்கண்டு வெளியேற்ற வேண்டியது தங்கள் கடப்பாடு என்று எண்ணுகிறேன். அது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானதென்பதே எனது கருத்து. அப்படியான நடவடிக்கை ஒரு போதும் உங்களையோ உங்கள் கட்சியையோ பாதிக்காது. அத்தகைய நடவடிக்கைகளை தமிழ் மக்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள். ஏனெனில் அந்தக் கறுப்பாடு ஒரு தமிழ் தியாகியும் அல்லர். பல தசாப்தங்களாகக் கட்சியை வளர்த்தவரும் அல்லர். சில்லுக்கு மிண்டி போட இடையிட்டு வந்தவர் என்றதுதான் எ்ல்லோருக்கும் தெரிந்த விடயம்.

அடுத்ததாக நீங்கள் தங்களது குமாரனை அரியணையில் இருத்திப் பார்க்க ஆசைப்பட்டதை நான் தவறு என்று சொல்லமாட்டேன். ஏனெனில் சாதாரணமான ஒரு தந்தைக்குவருகின்ற நப்பாசை அது. அதைச் செய்திருக்கலாம். எப்படி? அந்தச் சந்தர்ப்பத்தை ஒரு பொது மகனுக்குக் கொடுத்துவிட்டு அடுத்ததாக அவரின் கீழ் ஒரு கட்சித் தொண்டனாக அவரை அறிமுகப்படுத்தி அவர் மூலமாக அவரை நியாயப்படுத்திய பின்பு அவர் சுயமாக அரசியலுக்குள் வருவதான ஏற்பாடு பொருத்தமானதாக இருந்திருக்கும்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# புதுவிதி
PUTHU VITHI

# 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்தும்

# சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

## சிறுகதை

முதல் பரிசு : ரூ. 5000
இரண்டாம் பரிசு : ரூ. 3000
மூன்றாம் பரிசு : ரூ. 2000

கையெழுத்தில் ஏ-4 தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

## கவிதை

முதல் பரிசு : ரூ. 1000
இரண்டாம் பரிசு : ரூ. 750
மூன்றாம் பரிசு : ரூ. 500

10 சிறந்த படைப்புகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்

## கட்டுரை

முதல் பரிசு : ரூ. 1000
இரண்டாம் பரிசு : ரூ. 750
மூன்றாம் பரிசு : ரூ. 500

ஏ-4 தாளில் 3 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

10 சிறந்த படைப்புகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்

**கட்டுரைப் போட்டி**

**க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கானது**
- சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு
- பயனுள்ள வகையில் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தல்
- ஜனநாயக அரசியலின் பலமும் பலவீனமும்

**க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கானது**
- சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு
- மாணவர்களின் ஆளுமையில் விளையாட்டுக்களின் பங்கு
- வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம்

**போட்டிகளுக்கான விதிகள்:**
- சிறுகதை, கவிதை போட்டிகளுக்கு வயது கட்டுப்பாடு கிடையாது.
- மாணவர்களாயின் அதிபர் அல்லது வகுப்பு ஆசிரியரின் ஒப்பம் அவசியம்.
- ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 20.04.2018**

அனுப்ப வேண்டிய முகவரி:

**புதுவிதி**
**இல. 107, இராச பாதை,**
**கோப்பாய் - திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**


K

## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்லை ரவி -

தொடர் 32

# நெடுந்தீவு



தமிழர் வரலாற்று பின்னணியில் நெடுந்தீவின் பங்களிப்பு முக்கியமானது. நெடுந்தீவு இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாணத்தின் தென்மேற்கிலுள்ள ஏழு தீவுகளுள் ஒன்றாகும். யாழ்ப்பாணத்திலிருந்து ஏறக்குறைய 20 மைல்களுக்கு அப்பாலும் இராமேஸ்வரத்தில் இருந்து 20 மைல் தொலைவிலும், பூநகரியிலிருந்து நேர் மேற்கே பதின்ம தூரத்திலும் அமைந்துள்ளது. இத்தீவு கிழக்கு மேற்காக 5 மைல் நீளத்தையும், வடக்குத் தெற்காக 5 மைல் அகலத்தையும் கொண்டுள்ளது.

நெடுந்தீவுக்கு பண்டைக்காலம் முதலாகப் பல பெயர்களிட்டு அழைக்கப்பட்டு வந்திருப்பதைக் கணலாம். குறிப்பாக தலைத்தீவு, பசுத்தீவு, பால்தீவு, அபிஷேகத்தீவு, தயிர்த்தீவு, அவுசதலோகய, மருந்துமா மலைவனம் முதலான பெயர்களால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதற்கொண்டு அழைக்கப்பட்டு வந்துள்ளது. இவையாவும் காரணப் பெயர்களாகும். நெடுந்தீவு என்ற சொல்லின் வருமொழி முதலில் வரும் நெடும் என்பது இத்தீவின் நீளத்தைக் குறிப்பிடவில்லை. நெடுந்தீவானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நெடுந்தொலைவில் இருப்பதையே குறிப்பதாகும். இத்தீவுக் கூட்டங்களுள் மிகவும் (நெடும்) நீளமான தீவு வேலணைத்தீவு என்பது குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின் யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தொலைவில் இருப்பதால் இத்தீவு நெடுந்தீவு என்று பெயர் பெற்றது என்பர்.

நெடுந்தீவினை பசுத்தீவு என அழைப்பதற்குக் காரணம் இப் பகுதியின் தரைத் தன்மையையும் மக்களின் பொருண்மிய நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப் பெற்றதாகும். இத்தீவின் கிழக்குப் பகுதியும், தென்பகுதியும் பரந்த புல் நிலங்களாக அமைந்தமையால் மந்தைகள் மேய்ப்பதற்குப் பெரிதும் பயன்பட்டமையால் பசுத்தீவு என்ற பெயரால் அழைக்கப்பட்டதாக காரணம் செப்பப்படுகின்றது. இதேவேளை, பால்தீவு, தயிர்த்தீவு, அபிஷேகத்தீவு என்ற பெயர்களால் இத்தீவு அழைக்கப்பட்ட ஒரு வகையான காரணமிருந்ததைக் காணலாம்.

அந்த வகையில் இத் தீவிலிருந்து மாவிட்டபுரம் தமிழகத்தின் தனுஷ்கோடி, இராமேஸ்வரம் முதலான இடங்களிலுள்ள கோயில்களுக்குப் பால், தயிர் பொருட்கள் நாவாய் மூலம் அனுப்பப்பட்டு வந்தமையால் இப்பெயர் தோன்றிற்று. ஆலய அபிஷேகப் பொருட்களான தேங்காய், இளநீர், பழவகைகள் பால், தயிர் முதலான பொருட்களும் அக் கோயில்களுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்டமையால் அபிஷேகத் தீவு என்றும் அழைத்துக் கொண்டனர்.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட வைத்திய ராஜசிங்கன் என்ற விருதுப் பெயர் கொண்ட யாழப்பாண மன்னன் செகராசசேகரன், நெடுந்தீவை "மருத்துவ மாமலைவனம்" என்று போற்றியுள்ளான். இத்தீவெங்கும் மருந்து மூலிகைகள் காணப்பட்டமையால் இப் பெயர்கள் தோற்றம் பெறலாயின. மேலும் புராண இதிகாச கால வரலாறுகளுடனும் நெடுந்தீவின் வரலாற்றுப் பின்புலம் இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இராம, இராவண யுத்தத்தில் மயக்கமுற்று வீழ்ந்த இராமர், படைவீரர்களைக் காப்பாற்றும் பொருட்டு, மூலிகைகள் நிறைந்த சஞ்சீவி மலையைக் கொண்டுவரும்படி அனுமானைப் பணிக்க, அனுமன் அக்கட்டளைப்படியே சஞ்சீவி மலையைப் பெயர்த் தெடுத்துக் கொண்டு, கடலைத் தாவி இலங்கைக்கு வரும் பொழுது, அம்மலையிலிருந்து சிதறி வீழ்ந்த ஒரு பகுதியே இத்தீவு என்றும் மரபு வழியாக நம்பப்படுகின்றது. அதே கணம் இத் தீவில் மதிப்பிடமுடியாத மூலிகை மரம் ஒன்று இருப்பதாகவும், அதைச் சுற்றி நாக பாம்புகள் காவல் புரிவதாக இப் பகுதி மக்களிடம் ஒரு வகையான நம்பிக்கை நிலவிவருவதையும் காணலாம்.

நெடுந்தீவின் பழைமையான வரலாற்றில் வெடியரசன் என்ற மன்னனது காலம் குறிப்பிடத்தக்கது. இது கண்ணகி வழக்குரையிலே வெடியரசன் கதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வெடியரசன் என்ற மன்னன் இத் தீவுப் பகுதியில் மன்னனாக இருந்தான். அவன் கோட்டை அமைத்து ஆட்சி புரிந்த இடம் நெடுந்தீவு எனக் கருதப்படுகிறது. வெடியரசன் நெடுந்தீவையும் அவனது தம்பி வீர நாராயணன் புங்குடுதீவையும் விளங்குதேவன் நயினாதீவையும், ஏரிளங்குரவன் வேலணையையும் ஆட்சி புரிந்ததாக நாட்டார் இலக்கியம் கூறுகின்றது. சோழ அரசனின் கடற்படைத் தளபதி மீகாமன் கடற்படையுடன் வந்து அம் மன்னர்களுடன் பெரும் போர் புரிந்து இறுதியில் அவர்களிடமிருந்து விலை மதிப்பிடுவதற்குரிய இரத்தினமணியைப் பெற்றுச் சென்ற கதையும் பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபற்றிய மேலதிக தகவல்களை வெடியரசன் வரலாறு என்ற நூலின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

மேலும், வெடியரசன் கோட்டையை அண்மித்த பகுதிகளில் மட்பாண்ட ஓடுகள், கூரையோடுகள், வட்டமான நாணயங்கள், சதுர நாணயங்கள் என்பனவும் கிடைத்துள்ளன. இக் காரணங்களால் இத்தீவும் தொல்லியற் பண்பாட்டுத் தலமாகக் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தரசர்களின் காலத்திலும் நெடுந்தீவு சிறப்புப் பெற்றிருந்தது. யாழ்ப்பாண மன்னர்களின் அமைச்சரவையில் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களின் வழிவந்தவர்கள் இன்றும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(18ஆம் பக்கம் பார்க்க)





# வாரப்பலன்

### மேடம்
நல்லெண்ணம் மனதில் மிகுந்திருக்கும். உடன் பிறந்த வருக்கு உதவுவீர்கள். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். மனைவியின் நற்செயல்களை பாராட்டுவீர்கள்.

### துலாம்
சேமிக்கும் விதத்தில் வரு மானம் அதிகரிக்கும். வாகன பராமரிப்புச் செலவால் பயணம் இலகுவாகும். பிள்ளைகள் பெருமை தேடித் தருவர். சீரான ஓய்வால் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பீர்கள்.

### ரிஷபம்
புதிய உத்தியுடன் திட்டமிட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அன்றாட வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கும். வாகன பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொள்வர்.

### விருச்சிகம்
பேச்சில் ஆன்மீக கருத்து மிகுந்திருக்கும். உறவி னர்களுடன் மகிழ்ச்சிகரமான சந்திப்பு ஏற்படும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுவர். சுபநிகழ்வு ஏற்படும்.

### மிதுனம்
பேச்சிலும் , செயலிலும் சமயோசிதம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவரின் பணி நிறைவேற உதவுவீர்கள். குடும்பத் தேவைகளை தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர்.

### தனுசு
மனதில் சஞ்சலம் ஏற்பட்டு விலகும். அன்புக்கு உரியவரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் நிதானம் பின்பற்றவும். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். இதமாக வழிநடத்துவீர்கள்.

### கடகம்
சமூக நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றம் தரும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல் லாதவருக்கு இடம் தர வேண்டாம். பிள்ளை களின் மனதில் உருவான குழப்பம் தீர உதவுவீர்கள். சத்தான உணவுகளை விரும்பிச் சாப்பிடுவீர்கள்.


### மகரம்
திட்டமிட்ட பணி இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். வாழ்வியல் நடைமுறை சிறப்பாக அமையும். உறவினர்களால் அன்பும், ஆதரவும் உண்டாகும். பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

### சிம்மம்
ஆடம்பர செலவுகளை தவிர்ப்பதால் கடன்சுமை குறையும் தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும்.


### கும்பம்
அன்றாடப் பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகள் அறிவில் மேம்படுவர்.

### கன்னி
பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். உடல் ஆரோக்கியத்தில் உரிய கவனம் வேண்டும். நிலுவைக்கடன் வசூலாகும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார்.

### மீனம்
நண்பர், உறவினரின் அன்பும், பாராட்டும் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி பற்றி பேச்சு நடந்தேறும். பொது விவகாரங்களில் அமைதி காக்கவும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்ற முயல்வீர்கள்.



“வறுமையை ஒழிப்போம்” என்ற தொனிப் பொருளில் வாழைச்சேனை, கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.கமலநேசனால் முன் னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டங்களில் ஒன்று. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்றது.




தங்களது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைத் தேடிப் போராட்டத்தில் 410ஆவது நாளாக ஈடுபட்டு வரும் நிலையில், வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் வர்த்தக சங்கம், பிரதேச செயலகம் ஆகியன இராணுவத்துடன் ஒன்றி ணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள களியாட்ட விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது...




கடந்த 29ஆம் திகதி சுவிஸ் நாட்டில் காலமான குணாளன் மாஸ்டர் என்று அழைக்கப்படும் ஜெ.மூர்த்திக்குப் புதுக்குடியிருப்பில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.




மட்டக்களப்பில் வறிய நிலையில் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களுக்கு கைத்தொழில் வாணிப் அமைச்சால் வாழ்வாதார உதவுகள் வழங்கப்பட்டது.



அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் நீலகண்டனின் நினைவு அஞ்சலி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.



உலக சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை தமிழ் இளைஞர் சேனையின் ஏற்பாட்டில் “எமது கடற்கரையை பாதுகாப்போம்” என்ற தொனிப் பொருளில் கடற்கரையை சுத்தப்படுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.




# முல்லாவின் தந்திரம்

ஒரு நாள் முல்லா குளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாத்துக்களில் ஒன்றைப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்கள் கரையோரமாக வரும்போது முல்லா அதனை எட்டிப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்களோ அவர் கையில் அகப்படுவதுபோல பாவனை செய்து நழுவிக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் முல்லாவின் நண்பரொருவர் அந்தப் பக்கமாக வந்தார்.வாத்தைப் பிடிக்க முல்லா முயற்சி செய்வதையும், அதில் தோல்வியடைவதையும் காண நண்பருக்கு சிரிப்பு வந்தது.

"என்ன முல்லா அவர்களே வாத்து வேட்டை நடக்கிறது போலிருக்கிறது" என்ற சிரித்துக் கொண்டே கேட்டார். முல்லா உடனே தனது பையிலிருந்த ரொட்டித் துண்டை எடுத்து, குளத்து நீரில் நனைத்து, சாப்பிடத் தொடங்கினார். "என்ன செய்கிறீர்கள் முல்லா அவர்களே?" என நண்பர் கேட்டார்.

"வாத்து சூப்பில் ரொட்டியை நனைத்துச் சாப்பிடுகிறேன்" என்று தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு கூறிச் சமாளித்தார் முல்லா.

# தெரிந்த பழமொழி தெரியாத விளக்கம்



**மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.**

**விளக்கம்:** மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே என்பது தான் உண்மை. அதாவது ஆற்றுப்படுகைகளில் மண் குதிர்கள் இருக்கும். அவற்றில் கால் வைத்தால் கால்கள் உள்ளே பதியும். அந்த மண் குதிரை (குதிர் ஐ) நம்பி ஆற்றில் இறங்காதே என்பது தான் உண்மை.


**சேலை கட்டிய மாதரை நம்பாதே**

**விளக்கம்:** சேல் அகட்டிய மாதரை நம்பாதே என்பது தான் அதன் உண்மை பொருள். சேல் என்றால் கண். தன் கணவனுடன் இருக்கும்போது கண்களை அகட்டி வேறு ஒரு ஆடவனை பார்க்கும் பெண்களை நம்பாதே என்பது தான் உண்மைப் பொருள்.

# அட அப்படியா?




திருமணத்தின்போது அட்சதை (அரிசி) தூவி வாழ்த்தும் முறை எகிப்திலும் இருந்தது. 'உணவு கஷ்டம் இல்லாமல் நலமோடு நீண்ட காலம் மணமக்கள் வாழ வேண்டும்' என்பதுதான் அரிசி தூவி வாழ்த்துவதன் பொருள்.



திருப்பதியில் 200 ஆண்டுகளுக்கு முன்னர் "புளியோதரை"தான் பிரசாதம். லட்டு கிடையாது.

# ஒரு குறள்
## பலர் விளக்கங்கள்



**குறள் 124: (அடக்கமுடைமை)**

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**கலைஞர் மு.கருணாநிதி உரை:** உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிடச் சிறந்தது எனப் போற்றப்படும்.

**மு.வரதராசனார் உரை:** தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும்.

**சாலமன் பாப்பையா உரை:** தன் நேர்மையான வழியை விட்டு விலகாது, அடக்கத்துடன் வாழ்பவனைப் பற்றிய பிறர் மனத் தோற்றம் மலையைக் காட்டிலும் மிக உயரமானது.


# கேள்விக்கு என்ன பதில்?

1) பழைமையான உரோமன் நாட்காட்டியில் எத்தனை மாதங்கள் இருந்தன?
2) கால்பந்தாட்டம் எப்பொழுது ஒலிம்பிக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டது?
3) உயிர் வெள்ளி எனப்படுவது எது?
4) கிரேக்கர்கள் வணங்கிய சூரியக் கடவுள் எது?
5. நூற்றாண்டுப் போர் எந்த நாடுகளுக்கிடையில் நடைபெற்றது?



**பதில்கள்**

1. 10
2. 1922
3. பாதரசம்
4. அப்போலோ
5. இங்கிலாந்து-பிரான்ஸ்






**தோசையம்மா தோசை**
**அம்மா சுட்ட தோசை**
**அரிசி மாவும் உளுத்தம் மாவும்**
**கலந்து சுட்ட தோசை**
**அப்பாவுக்கு நான்கு**
**அம்மாவுக்கு மூன்று**
**அண்ணனுக்கு இரண்டு**
**பாப்பாவுக்கு ஒன்று**
**தின்னத் தின்ன ஆசை**
**திருப்பிக் கேட்டா பூசை.**

# சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



# தர்மம் வென்றும் தேர் எரிந்தது ஏன்?

குருஷேத்திரப்போர் முடிந்துவிட்டது. தர்மம் அதர்மத்தை வென்றுவிட்டது. கௌரவர்களை அழித்துப் பாண்டவர்கள் தர்மபுத்திரர் தலைமையில் தர்மராச்சியம் ஸ்தாபிக்கும் நன்னாள் பிறந்துவிட்டது. பதினெட்டாம் நாள் போர் முடிந்து சூரியன் அஸ்தமிக்கும் வேளை, அந்தக் கால முறைப்படி வெற்றி பெற்ற மன்னர்கள், மகாரதர்கள் தங்கள் வீரத்திற்கு மரியாதை பெறும் சடங்கு நிகழ வேண்டியிருந்தது.

அவரவர்களின் தேரோட்டிகள் கீழிறங்கி, ரதத்தை வலம் வந்து தரையில் மண்டியிட்டு நிற்க, மகாரதர்களும், மன்னர்களும் தேரிலிருந்து இறங்கி வந்து மலர்மாலைகளை ஏற்று, மக்கள் ஆரவாரத்தைக் கேட்டு மகிழ்ச்சியடையும் நேரம் அது. பாண்டவர்களின் ரதங்கள் வரிசையாக வந்து நிற்கின்றன. யுதிஷ்டிரர், பீமன், அர்ஜூனன், நகுலன், சகாதேவன் ரதங்களில் வீற்றிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

யுதிஷ்டிரரின் தேர்ப்பாகன் தேரினின்றும் இறங்கி, தேரை வலம் வந்து மண்டியிட்டு மன்னன் யுதிஷ்டிரன் பாதம் பணிந்து நிற்கிறான். யுதிஷ்டிரன் கீழே இறங்கியதும் அவனுக்கு மாலை அணிவித்து 'யுதிஷ்டிரர் வாழ்க' என்று குரல் எழுப்புகிறான். 'அடுத்து பீமனின் ரதம். பாண்டவர்களின் வெற்றிக்குக் காரணமான வீரனல்லவா? துரியோதனனின் தொடையைப் பிளந்தவனல்லவா? மரியாதை சற்று அதிகமாகவே கிடைக்கிறது.

அடுத்து, அர்ஜூனன் ரதம், தேர்ப்பாகன் சாதாரணமானவனா? துவாரகாதிபதி ஸ்ரீகிருஷ்ணன் அல்லவா? பாண்டவர்களும், கௌரவர்களும் பகவானின் அவதாரம் என்று போற்றிப் புகழ்ந்த புண்ணிய புருஷனல்லவா அவனுக்குத் தேரோட்டி! பின் பெருமையிருக்காதா அர்ஜூனனுக்கு? யாருக்கும் கிடைக்காத பெரும்புகழும் பாக்கியமும் தனக்குக் கிடைக்கப்போவதை எண்ணிப் பூரித்தான். தலை கனத்தது. அஸ்திரமெல்லாம் கீழே விழ அஞ்சி நடுங்கி நின்ற நிலையில், ஆசானாக கீதோபதேசம் செய்த அண்ணலை அப்போது தேர்ப்பாகனாக மட்டுமே அவன் எண்ணினான். ஒருகணம் அறிவு மழுங்கி ஆணவம் மேலிட நின்றான்.

ஆனால், தேர்ப்பாகன் கண்ணன் கீழே இறங்கவில்லை. எங்கும் ஒரே அமைதி. அனைவர் மனதிலும் ஒருவித பரபரப்பு. அர்ஜூனன் ஒரு கணம் பொறுத்தான். அவன் அறியாமை அவனுள்ளே பேசியது 'கர்மத்தைச் செய். பலனை எதிர்பாராதே என்று எனக்கு உபதேசித்தானே கண்ணன், இப்போது தான் மட்டும் தேர்ப்பாகனுக்கு உரிய கர்மத்தைச் செய்யாமல் விதிவிலக்குப் பெற நினைக்கிறானே?' என்று சிந்தித்தான்.



"அர்ஜூனா! நீ முதலில் இறங்கு. இந்தத் தேர் மற்றவர்களின் தேர்களிலிருந்து விதிவிலக்கு" என்ற ஆணை கண்ணனிடமிருந்து பிறந்தது. கண்ணனின் ஆணையை மீறி அறியாதவன் அர்ஜூனன். தேரிலிருந்து இறங்கிவிட்டான். கண்ணன் ஏதுமறியாதவன் போல தேரிலிருந்து இறங்கினான். அவ்வளவுதான், அர்ஜூனனின் தேர் திடீரென தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. அனைவர் முகத்திலும் அதிர்ச்சி.

கண்ணன் பேசினான். "அர்ஜூனா, எதிரிகள் உன் ரதத்தின் மீது ஏவிய மந்திர சக்திகளெல்லாம் நான் அமர்ந்திருந்த காரணத்தினால் பலனற்று இருந்தது. உன் தேரின் முடிவுக் காலத்தைத் தெரிந்துகொண்டுதான் உன்னை முதலில் இறங்கச் சொன்னேன். நான் முதலில் இறங்கியிருந்தால், இந்தத் தீயினின்றும் உன்னைக் காப்பாற்ற வேண்டிய நிலை வந்திருக்கும். இப்போதும் உன்னைக் காக்கவே நான் சம்பிரதாயச் சடங்குகளை மீறினேனே தவிர, தேரோட்டியின் கடமையைச் செய்யத் தயங்கியதால் அல்ல. சற்று நில், உன்னை வலம் வந்து மாலையிடுகிறேன்!" என்றான்.


ஆனால், தன்னுடைய அகந்தையையும் அறியாமையையும் எண்ணி வெட்கித் தலைகுனிந்த அர்ஜூனன், கண்ணனின் கால்களில் விழுந்து வணங்கினான்.

# தேவனின் இராச்சியத்தை தேடுங்கள்...!

ஒருமுறை இயேசு கிறிஸ்து மக்கள் திரண்டிருந்த பொதுவெளியில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவரிடம் ஒருவன் வந்து, 'நாங்கள் சகோதரர்கள் இரண்டு பேர். எங்கள் சொத்துகளைச் சேதாரமில்லாமல் எங்களுக்குப் பிரித்துக்கொடுங்கள்" எனக் கோரிக்கை வைத்தான்.

அதற்கு அவர், 'என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாகவும் வைத்தவன் யார்?" என்றவர் திரளான மக்களை நோக்கிச் சொன்னார்,

"பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாகயிருங்கள். ஒருவனுக்கு எவ்வளவு திரளான சொத்துகள் இருந்தாலும், அது அவனுக்கு ஜீவனல்ல என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்" என்றார். மேலும் அவர்களுக்குப் புரியும்படியாக உவமையுடன்கூடிய ஒரு கதையைச் சொன்னார்.



செல்வம் மிக்க நிலச்சுவான்தார் ஒருவனுடைய நிலம் நன்றாக விளைந்திருந்தது. அறுவடைக்குக் காத்திருந்த வயல்களைப் பார்த்தபோது, "இத்தனை தானியங்களையும் சேமித்து வைக்க என்னிடம் களஞ்சியம் இல்லையே... நான் என்ன செய்வேன்!" என வருந்தினான்.

பின்னர் அவனுக்கு ஒரு யோசனையும் பிறந்தது. பழைய களஞ்சியத்தை இடித்துவிட்டு, பெரியதாக ஒரு புதிய களஞ்சியத்தைக் கட்டினான். அதில் தனது வயலில் விளைந்த தானியங்களைக் கொண்டுவந்து பாதுகாத்தான்.

அப்போது அவன் தனக்குத்தானே பேசிக்கொண்டான். 'தலைமுறை தலைமுறைக்கும் தேவையான சொத்துகளைச் சேர்த்துவிட்டேன். குறிப்பாக இந்த ஆண்டு கிடைத்திருக்கும் இந்த தானியத்தை என் தேவைக்குப்போக மற்றதை விற்று பொருளும் பணமும் சேர்ப்பேன். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்து வாழ்வேன். பிரியப்பட்டதைச் சாப்பிட்டு, குடித்து, களிகூர்ந்திருப்பேன்' எனச் சொல்லிக்கொண்டான்.

தேவனோ அவனை நோக்கி, 'மதிகேடனே, உன் ஆத்மா உன்னிடத்திலிருந்து இன்றைய இரவில் எடுத்துக்கொள்ளப்படும். அப்போது நீ சேகரித்தவை யாருடையதாகும்?" எனக் கேட்டார்.

'தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிசங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படித்தானிருக்கிறான்" - என்றார்.

# குழந்தைகள் வறுமையில் வாடக்கூடாது



நமது குழந்தைகள் வறுமையில் வாடக்கூடாது என்று நபிகள் நாயகம் கூறுகிறார்.

ஸஃஅத் இப்னு அபிவக்காஸ் என்பவர் நோயால் பாதிக்கப்பட்டிருந்த போது, நாயகம் பார்க்க வந்தார். "இறைதூதரே! நான் எந்த அளவு நோயில் பாதிக்கப்பட்டுள்ளேன் என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

என்னிடம் மிகுதமான சொத்து உள்ளது. எனது மகள் மட்டுமே எனது வாரிசு. மூன்றில் இரு பாகத்தை தர்மமாக கொடுக்கட்டுமா?" என்று கேட்டார்.

அதற்கு நபிகள், "வேண்டாம்" என்றார்.

"நான் பாதியைக் கொடுக்கவா?" என்றார் அபிவக்காஸ்.

அதற்கும் "வேண்டாம்" என்ற நாயகத்திடம், "மூன்றில் ஒரு பாகத்தைக் கொடுக்கலாமா?" என்று கேட்டார் அபிவக்காஸ்.

அதற்கு நபிகள், "சரி, மூன்றில் ஒரு பங்கை தர்மம் செய். அதுவும் அதிகமே.

ஏனென்றால் நீ உனது வாரிசை வறுமையின் காரணமாக, பிறரிடம் கை ஏந்தும்படி விட்டுச் செல்வதை விட அவர்களை எல்லாம் நிறைந்த நிலையில் விட்டுச் செல்வது சிறந்த ஒரு செயலாகும் - என்று கூறினார்.

# ரிலாக்ஸ் ப்ளீஸ்...!

**வெந்நீர் குளியல்**

பகல் முழுக்க உழைத்துக் களைத்து வீடு ரும்புகிறவர்களுக்கு, வெதுவெதுப்பான வெந்நீரில் ளிப்பதைப்போல மனஅழுத்தத்தைக் குறைக்கும் ருந்து வேறு எதுவுமில்லை. குளியலுக்கு உங்களுக்குப் டித்த எலுமிச்சை, சந்தனம் போன்ற மணமுள்ள வர்க்காரங்களைப் பயன்படுத்தலாம். நிதானமாகக் ளியுங்கள். அன்றைய அலுப்பு மொத்தமாக ஓடிவிடும்.

**தியானம்**

மனமொன்றி தியானம் செய்வது, வாழ்க்கை முழுக்க நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். அது உடல்



ஆரோக்கியத்துக்கும் நல்லது. எனவே, தியானத்துக்கு நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

**மிதமான நடை**


உடற்பயிற்சி, எண்டார்ரபின் ஹார்மோனைச் சுரக்க உதவும். இது வலிகளைக் குறைத்து, நல்ல மனநிலையைத் தரும். இரவு உணவுக்குப் றகு உங்கள் வீட்டுக்கு அருகிலேயோ, வீட்டைச் சுற்றியோ ல நிமிடங்கள் நடந்துவிட்டு வந்தால் போதுமானது.

**இசை**

மோசமான மனநிலையை மாற்றும் சக்தி இசைக்கு ண்டு. உங்களுக்குப் பிடித்த இசையை ரசியுங்கள். அது ன அமைதிக்கும், உற்சாகத்துக்கும் உத்தரவாதம் என்பதை றந்துவிடாதீர்கள்!

**நண்பர்கள்**

வாரத்துக்கு ஒருமுறையாவது நண்பர்களுடன் சேர்ந்திருப்பதை, அவர்களுடன் உற்சாகமாகப் பொழுதுபோக்குவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான உடல்நிலைக்கு ல்ல உணவுப் பழக்கம் எந்த அளவுக்கு அவசியமோ, தேபோல ஆரோக்கியமான மனநிலைக்கு நல்ல நட்பும் வசியம்.




# கோடைக்கு சிறந்தது நுங்கு

கோடை தொடங்கிவிட்டது. பனைமரங்களும் பூத்துக் காய்க்கத் தயாராகிவிட்டன. இன்னும் சில நாள்களில் நுங்கு விற்பனைக்கு வந்துவிடும்.

நுங்கு குடிப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதைப் பார்ப்போமா...?

நுங்கை அவ்வப்போது வெட்டிப் புத்தம் புதிதாகச் சாப்பிடுவதே சிறந்தது. கூடியவரை, காலையில் வெட்டிய நுங்கை மாலைக்குள் சாப்பிட்டுவிட வேண்டும். நீரில் ஒருமுறை கழுவியபிறகே சாப்பிட வேண்டும்.

100 கிராம் நுங்கில் 92.69 கிராம் நீர்ச்சத்து, 0.64 கிராம் புரதம், 0.10 கிராம் கொழுப்பு, 0.26 கிராம் உலோக



உப்புகள், 6.29 கிராம் சர்க்கரைச் சத்து ஆகியவை உள்ளன.

வியர்க்குரு தொல்லையால் அவதிப்படுபவர்கள் நுங்கு சாப்பிடுவதுடன் அதை வியர்க்குருவின் மேல் தடவி வருவது நிவாரணம் தரும். சரும எரிச்சல், சிவத்தல் போன்ற சருமம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் நுங்கை மேலே பூசலாம்.

நுங்கில் அதன் சதைப் பகுதியை மட்டுமல்லாமல் அதன் மேல் தோலையும் சேர்த்துச் சாப்பிட்டால்தான் முழுமையான சத்து கிடைக்கும். ஆனால், சிறு குழந்தைகள், வயதானவர்களுக்கு அது சமிபாடு அடையாது. அதனால் நுங்கை மட்டும் கொடுப்பது நல்லது.

குளிர்ச்சித்தன்மையை உண்டாக்கும் நுங்கு, கோடைகாலத்துக்கு ஏற்ற இயற்கை உணவு. தண்ணீர் தாகத்தைத் தீர்க்கக்கூடியது.

பசியைத் தூண்டுவதுடன் குமட்டலைக் கட்டுப்படுத்தி தண்ணீர் தாகத்தைப் போக்கும். கர்ப்பவதிகள் சாப்பிட ஏற்றது. கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் செரிமானக் கோளாறு, மலச்சிக்கல், அசிடிட்டி பிரச்சினைகளையும் சரிசெய்யும்.

கோடையில் அம்மை நோய்கள் பரவும். நோய் தாக்கியவர்கள் இளம் நுங்கைச் சாப்பிட்டால் உடல் குளிர்ச்சி அடைவதுடன், குடலில் உள்ள புண்களும் ஆறும். அம்மை வராமல் முன்கூட்டியே தடுக்கவும் இது உதவும்.

நுங்கில் உள்ள அந்டோஸைனின் (Anthocyanin) என்னும் பைட்டோகெமிக்கல் (Phytochemical) மார்பகப் புற்றுநோய் செல்கள், கட்டிகளின் வளர்ச்சியைத் தடுக்கும்.

# இயற்கை: இனிய சிகிச்சை



"இயற்கை என்பது நாம் ன்றுலா செல்லும் இடமாக ருக்கக்கூடாது. அது நமது டாக இருக்க வேண்டும்" என்று பிரபல அமெரிக்க ற்றுச்சூழல் ஆர்வலர் கேரி னைடர் கூறியிருக்கிறார். ஆனால், இன்று இலத்திரனியல் சாதனங்கள் சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் நகரவாசிகளான நமக்கு இயற்கையை நினைக்கவே நேரமிருப்பதில்லை. அப்படியே நினைத்தாலும் நம்மைச்சுற்றி எங்கே இயற்கை சார்ந்த விடயங்கள் இருக்கின்றன? இப்படி நாம் இயற்கையிடம் இருந்து விலகிச் சென்றுகொண்டேயிருக்க, நமது ஆரோக்கியமும் நமக்குக் கையசைத்து வழி அனுப்பி வைக்கிறது.

உணவே மருந்து என்று சொல்வது போன்று இயற்கையுடன் ஒன்றி வாழ்வதும் மருந்தே என்று மருத்துவம் கூறுகிறது. இதை மனம்சார்ந்த நோய்கள் இருப்பவர்களுக்கு மருத்துவர்கள் பரிந்துரைப்பதும் உண்டு. இதைப்போன்ற ஒரு சிகிச்சையைத்தான் மருத்துவத் துறையினர் 'ஹர்டிகல்சர் தெரபி' (Horticulture Therapy) என்று அழைக்கின்றனர். தோட்டக்கலை மற்றும் அதைச் சார்ந்த விடயங்களின் மூலம் ஒருவரை இயற்கையுடன் ஒன்றச்செய்து அதன்மூலம் மனநோய்களைக் குணப்படுத்தும் முறையே ஹர்டிகல்சர் தெரபி.

**குழப்பமின்மை**

நம்மில் பலருக்கும் முக்கியமான விடயத்தில் முடிவெடுக்கும் முன் பல குழப்பங்கள் வரும். யோசிக்க யோசிக்க அது நமக்கு மனஅழுத்தத்தையும் தரும். இப்படி இருக்கும் மக்களைத் தெளிவான மனநிலையை அடையச் செய்து, பதற்றமும், குழப்பமும் இன்றி முடிவுகள் எடுக்கவும் தோட்டக்கலை உதவுமாம்.

**பொறுப்புணர்வு**

அதிகம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள், தன்னம்பிக்கை அற்றவர்கள், அடிக்கடி பதற்றமாகக்கூடியவர்கள் என அனைவருக்குமே ஒரு தோட்டத்தைப் பராமரித்துப் பாதுகாப்பது புதிய உத்வேகத்தைத் தரும். ஒரு செடிக்கு எந்த அளவு தண்ணீர் ஊற்றவேண்டும் என்பதைத் தினமும் கண்காணித்துக் கண்டுபிடிப்பதைப் போன்ற சிறு விடயங்கள்கூட ஒருவரது மனதைக் கட்டுப்படுத்தப் பெரிதும் உதவும். இதனால் ஒருவரிடம் பொறுப்பு உணர்ச்சி அதிகரிப்பதையும் பார்க்க முடியும்.

**மகிழ்ச்சி**

தோட்டக்கலையில் மண்சார்ந்த செயல்களில் ஈடுபடும்போது மன அழுத்தத்துக்குக் காரணமான ஹர்டிசல் ஹோர்மோன் குறைந்து மகிழ்ச்சியைத் தரும் ஹோர்மோன்களான செரோட்டோனின் மற்றும் டொபமைன் ஆகியவை அதிகம் சுரக்கும். இயற்கையுடன் அதிகநேரம் செலவிட்டால் நினைவாற்றலும் யோசிக்கும் திறனும் மேம்படும்.

■ கங்காதரன்

# தேசிய அணியில் வடக்கின் மூன்று முத்துக்கள்!

தேசிய அணிக் கனவு என்பது ஒவ்வொரு வீரருக்கும் நிச்சயமாக இருக்கும் ஒன்றுதான். தேசிய அணிக்கு விளையாட தகுதி இருந்தும் பல காரணங்களால் சிலருக்கு அது நிறைவேறாத கனவாகவே முடிந்து விடுவது துரதிர்ஷ்டவசமானது. அவ்வாறு தேசிய அணிக் கனவோடு பயணித்த பல லட்சம் வீரர்களில் பல தடைகளுக்கு அப்பால் தமது திறமைகளால் தமது இலட்சியத்தை அடைந்து, தற்போது சர்வதேச மட்டத்தில் வெற்றிநடை போடத் தயாராகிறார்கள் நம் வடக்கின் மூன்று முத்துக்கள்.

இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களை உள்வாங்குவதற்கான தெரிவுகள் அண்மையில் நிறைவடைந்தநிலையில், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் இம்முறை தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வீரர்களின் விவரங்களை கடந்த திங்கட்கிழமை வெளியிட்டது. இலங்கை அணியின் புதிய பயிற்றுவிப்பாளரான நிசாம் பக்கீர் அலியின் கண்காணிப்பின் கீழ் நாடு முழுவதும் உள்ள வீரர்களுக்கு வாய்ப்பை வழங்கும் நோக்கில், இம்முறை தேர்வுகள் பல பாகங்களிலும் பல கட்டங்களாக இடம்பெற்றன. நிறைவில் தற்போது ஏ, பி என இரண்டு குழாம்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 'ஏ' குழாமில் 30 வீரர்களும் 'பி' குழாமில் 18 வீரர்களும் உள்ளடங்குகின்றனர்.

தற்போது தெரிவான வீரர்களில், ஏற்கனவே



தேசிய அணியில் அங்கம் வகித்த வீரர்களுடன் இணைந்து மேலும் பல இளம் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும். வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கழகங்களில் இருந்து ஒரே ஒரு வீரர் மாத்திரம் இந்த குழாமில் இணைக்கப்பட்டுள்ளார். அத்துடன், ரினௌன் மற்றும் நியூ யங்ஸ் ஆகிய பிறிமியர் லீக்கில் பங்குபற்றும் கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மேலும் இரண்டு வடக்கின் நாயகர்கள் இடம்பிடித்துள்ளனர். மேலும், கிழக்கு மாகாண கழகங்களில் இருந்து இரண்டு வீரர்கள் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். வீரர்களான நிதர்சன் (சென். மேரிஸ் வி.க) யூட்சுபன் (யங்ஹென்றீசியன் வி.க., ரினௌன் வி.க) மற்றும் மன்னார் வீரரான பியூஸ்லஸ் (சென்.ஜோசப் வி.க, நியூ யங்ஸ் வி.க.) ஆகியோரே தங்கள் சர்வதேச அறிமுகத்திற்காக காத்திருக்கிறார்கள். இதில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கொழும்பு நியூயங்ஸ் விளையாட்டுக் கழகத்திற்காக இலங்கைப் பிறிமியர் லீக் போட்டிகளில் ஆடிவரும் மன்னார் சென்.ஜோசப் வீரரான பியூஸ்லஸ் அழைக்கப்பட்டுள்ளார். இவர் இவ்வருடம் டயலொக் சம்பியன் கிண்ணப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியதுடன் நியூயங்ஸ் அணி இத்தொடரில் மூன்றாமிடம் பெறவும் முக்கிய காரணியாகத் திகழ்ந்தவர்.

கடந்த நான்கு வருடங்களாக அநுராதபுரம் சொலிட் அணிக்காக ஆடிவந்து அண்மையில் கொழும்பு ரினோன் கழகத்துடன் இணைந்த இளவாலை யங்ஹென்றீசியன் வீரரான யூட்சுபன் இலங்கை ஜூனியர் அணிக்காக பல சர்வதேச போட்டிகளில் ஆடியிருந்த துடன் முதற்தடவையாக தேசிய சீனியர் குழாமில் இடம்பிடித்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். இவரின் சகோதரன் ஞானரூபன் கடந்த தொடர்களில் தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது.

மற்றொரு வீரனான நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிதர்சன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த பலகாலமாக நாவாந்துறை சென். மேரிஸ் விளையாடுக் கழகம் தேசிய ரீதியில் பிரகாசிக்க, அவ்வணியின் முக்கிய வீரராக செயற்பட்டதுடன் 23 வயதிற்குட்பட்ட தேசிய அணிக்காக "சாக்" சம்பியன் ஷிப் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார்.

ஒரு வீரன் தனது நாட்டை சர்வதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு எவ்வாறான போராட்டங்கள், தோல்விகள், அவமானங்கள், ஏமாற்றங்கள், புறக்கணிப்புகளை கடந்து வந்திருக்க வேண்டும் என்பது இங்கு கூறித் தான் புரிய வேண்டும் என்றல்ல. அதுவும் நம் நாட்டில் அதுவும் வடக்கில் இருந்து என்றால் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. இப்படியான பல போராட்டங்களை கடந்து, இன்று சர்வதேச மட்டத்திற்குள் நுழைந்திருக்கும் இவர்களின் புதிய பயணம் வெற்றிகரமானதாக அமையவும், சர்வதேச மட்டத்தில் மேலும் பல சாதனைகள் படைத்து எமது மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்றும் வாழ்த்துகிறோம்.

மேலும் இவர்களைப் போல் இன்னும் பல திறமையானவர்கள் நம் மண்ணில் கண்களில் சர்வதேசக் கனவுடன் தமது திறமைக்கான அங்கீகாரத்திற்காக ஏக்கத்துடன் உள்ளார்கள். நம்மவர்களின் சர்வதேச அறிமுகங்கள் ஓர் சாதனை தான் எனினும், சாதனை என்பதற்கு அப்பாற்பட்டு இவர்களைப் போல் இன்னும் சர்வதேச அறிமுகக் கனவுகளுடன் போராடிக் கொண்டிருக்கும் நம்மவர்களின் பார்வையில் விடிவெள்ளியாகவே காணப்படுகிறார்கள். எவ்வாறாயினும் வரும் காலத்தில் இன்னும் பல நம்மவர்களின் கனவுகள் நனவாகும் எனும் நம்பிக்கையோடு வடக்கை பிரதிநிதிதுவப்படுத்தும் நம்மவர்களை மேலும் பல சிகரங்களை தொட்டு எமது மண்ணுக்கு பெருமை சேர்க நாமும் வாழ்த்துவோம்...!

**தேசிய அணிக்கு தெரிவான வீரர்களின் விவரங்கள்**

**'ஏ' குழாம்**

**முன்கள வீரர்கள்**

D.T.S.அனுருத்த (நியூ யங்ஸ் வி.க) - மொஹமட் ரஹ்மான் (ரெட் ஸ்டார் வி.க) - அசேல மதுஷான் (புனித ஜோசப் கல்லூரி) - சபீர் ரசூனியா (ஜாவா லேன் வி.க.) - மொஹமட் சிபான் (மாவனல்லை யுனைட்டட் வி.க) - சர்வான் ஜோஹர் (கொழும்பு வி.க)

**மத்தியகள வீரர்கள்**

மொஹமட் அஸ்மீர் (கடற்படை வி.க) - தனுஷ்க மதுசங்க (கடற்படை வி.க) - கவிந்து இஷான் (விமானப்படை வி.க) - அபீல் மொஹமட் (கொழும்பு வி.க) - மொஹமட் ரிப்னாஸ் (கொழும்பு வி.க) - மரியதாஸ் நிதர்சன் (சென்.மேரிஸ் வி.க, யாழ்ப்பாணம்)



- சுந்தராஜ் நிரேஷ் (சௌண்டர்ஸ் வி.க) - மொஹமட் முஸ்தாக் (யங் ஸ்ரார் வி.க, மட்டக்களப்பு) - சதுர லக்ஷான் (க்ரீன் பீல்ட் வி.க, களுத்துறை) - சசங்க ஜயசேகர (ரட்ணம் வி.க)

**பின்கள வீரர்கள்**

ஜூட் சுபன் (ரினௌன் வி.க) - டிக்சன் பியஸ்லஸ் (நியூ யங்ஸ் வி.க) - உதய கீர்த்தி (இராணுவப்படை வி.க) -அமித் குமார (பெலிகன்ஸ் வி.க) - சன்ஜூக பிரியதர்சன (சௌண்டர்ஸ் வி.க) - சமித் சுபாசன (டொன் பொஸ்கோ வி.க) - சுபாஷ் மதுசான் (கடற் படை வி.க) - லஹிரு தாரக (புளு ஸ்ரார் வி.க)

**கோல் காப்பாளர்கள்**

ராசிக் ரிஷாட் (ரினௌன் வி.க) -தனுஷ்க ராஜபக்ஷ (நியூ யங்ஸ் வி.க) - ப்ரபாத் ருவன் அருனசிறி (விமானப்படை வி.க) - S.Rதேஷ் (SLTB வி.க) - கவீஷ் பெர்னாண்டோ (கொழும்பு வி.க)

**Standby**

ஹர்ஷ பெர்னாண்டோ (விமானப்படை வி.க) - D.K துமிந்த (விமானப்படை வி.க) - மொஹமட் பசால் (கொழும்பு வி.க) - டிலான் கௌசல்ய (கொழும்பு வி.க) - ஜீவன்த பெர்னாண்டோ (விமானப்படை வி.க)



**'பி' குழாம்**

**முன்கள வீரர்கள்**

சல்மான் அஹமட் (மாவனல்லை யுனைட்டட்) - மொஹமட் அர்சாட் (வெகனர்ஸ் வி.க)- ரியாஸ் அஹமட் (மாவனல்லை யூத் வி.க) - சதுரங்க பெரேரா (இராணுவப்படை வி.க) -நெத்ம மல்ஷான் (சொலிட் வி.க)

**மத்தியகள வீரர்கள்'**

ஷெஹான் யஷ்மில (கிரீன் பீல்ட் வி.க, களுத்துறை) - அமான் பைசர் (ரட்ணம் வி.க) - பஷரூட் பாயிஸ் (ஜாவா லேன் வி.க) - மொஹமட் முஜாஹித் (கெலி ஓய வி.க., கம்பளை) - பாசித் அஹமட் (கிறிஸ்டல் பெலஸ் வி.க.) - தேஷான் பெரேரா (வெகனர்ஸ் வி.க) - மொஹமட் சஹீல் (கடற்படை வி.க)

**பின்கள வீரர்கள்**

தரிந்து மதுசங்க (நியூ யங்ஸ் வி.க.) - விகும் அவிஷ்க (ரெட் ஸ்டார் வி.க.) - S.M.வசித் (கெடேரியன் வி.க, திருகோணமலை)

**கோல் காப்பாளர்கள்**

மெஹமட் உஸ்மான் (ரினௌன் வி.க) - மஹேந்திரன் தினேஷ் (பொலிஸ் வி.க)

■ குரு அரவிந்தன்

# மீளவிழியில் மிதந்த கவிதை...!

(மீளவிழியில் மிதந்த
கவிதையெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?)

மின்னல் அடித்ததுபோல எல்லாமே சட்டென்று நடந்து விட்டது. அதிர்ச்சியில் இருந்து நான் மட்டுமல்ல, அவளும் மீளவில்லை என்பதை அவளது அந்தப் பிடி உணர்த்தியது.

எவ்வளவு லாவகமாய் அவள் என்னைக் கடந்து சட்டென்று திரும்பிப் பின்பக்கமாய் வந்து என்னை இறுக்கி அணைத்தாள் என்பது எனக்கே வியப்பாக இருந்தது. தன்னைப் பாது காக்க என்னை முன்னால் தள்ளி நிறுத்தினாளோ, அல்லது எனது ஆண்மையில் அவளுக்கு இருந்த அதீத நம்பிக்கைதான் காரணமோ தெரியவில்லை, எதுவாய் இருந்தால் என்ன, என்னை நம்பிச் சரணடைந்தவளைக் காக்க வேண்டியது எனது பொறுப்பு என்பதை உணர்ந்து அவளுக்கு அடைக்கலம் கொடுத்தேன்.

தற்செயலாகத்தான் அது நடந்தது, பாடசாலையால் வரும்போது அவளது பென்சில் பெட்டி தெருவில் விழுந்து விடவே அதைக் குனிந்து எடுக்க முயன்றபோது, முன்வீட்டு வாசலில் படுத்திருந்த நாய் தன்னைத் தாக்கத்தான் எதையோ எடுக்கிறாள் என்ற பயத்தில் அவளைத் துரத்தத் தொடங்கியது. அந்தச் சமயம் பார்த்து நானும் எங்கள் வீட்டுக் கேற்றைத் திறந்து வெளியே வந்தேன். அதனால்தான் பாதுகாப்புத் தேடி ஓடி வந்து அருகே நின்ற என்னைக் கட்டிப்பிடித்தாள். அழகு ஓவியம் ஒன்று இதமான உடம்பும் சதையுமாய் என்னைத் திடீரெனக் கட்டிப் பிடித்ததில் நான் அதிர்ந்து போனதென்னவோ உண்மைதான். அதுவும் சில நாட்களாக யார் மீது எனக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டிருந்ததோ, அவளே வலியவந்து என்னை அணைப்பதென்றால்?

ஒரு ஸ்லோமோஷன் காட்சிப் படம் போல அந்தக் காட்சி என் மனதில் திரும்பத்திரும்ப நிழலாடிக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. சொர்க்கத்திற்குப் போனது போன்ற அந்த இனிய சுகம் அதிக நேரம் நீடிக்கவில்லை. அதிர்ச்சியில் இருந்து அவள் மீண்டபோது, பெண்மைக்கே உரிய நாணம் அவளைச் சட்டென்று விலகி நிற்கவைத்தது. வேர்த்து வியர்திருந்த முகத்தில் இன்னமும் பயக்களை தெரிந்தது. இப்பொழுதும் அவளது உடம்பு லேசாகப் பதறிக் கொண்டி ருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. மூச்சு வாங்க ஓடி வந்ததில் அவளது மார்பகம் மேலும் கீழும் ஏறி இறங்கியது. பாடசாலையின் மெல்லிய வெள்ளைச் சீருடை ஆங்காங்கே வியர்வையில் தோய்ந்து போனதில் அந்த இடத்தை மட்டும் சூரியவெளிச்சம் வட்டம் போட்டு அதிசயமாய்க் காட்டியது. வயசுக் கோளாறோ என்னவோ எனது பார்வை சட்டென்று அங்கேபட்டுத் தெறித்தபோது, அவள் என்னை அணைத்தபோது ஏற்படாத உணர்வு அந்த வனப்பில் கிளர்ந்தெழுந்தது. வேறு நேரம் என்றால் எனது பார்வையின் உக்கிரத்தை அவள் புரிந்து கொண்டிருப்பாள், இப்போதைய நிலையில் சுயமாக இயங்க முடியாமல் தடுமாறியதில் அவள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. தப்பாத இடத்தில் தப்பான பார்வை என்பதால் வலிந்து பார்வையைத் திசை திருப்பினேன்.



'இதிலே கொஞ்ச நேரம் இருங்க..!' அருகே இருந்த மரக்குற்றியைக் காட்டிச் சொன்னேன். அவள் பாதையைத் திரும்பிப் பார்த்தபடியே தயக்கத்தோடு உட்கார்ந்தாள். உட்கார்ந்ததும் ஓடிச்சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன். அதை வாங்கிய அவள் என்ன செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்தபடியே என்னை மேலும் கீழும் பார்த்தாள்.

'பயந்து போயிட்டீங்க, இதைக் கொஞ்சம் குடியுங்க..' என்றேன்.

சுயமாக இயங்கமுடியாமல் எனது வழி நடத்தலுக்காகவே காத்திருந்தவள்போல, மளமள வென்று தண்ணீரைக் குடித்தாள்.

முருகனுக்கு ஒரு பிள்ளையார் யானை உருவில் வந்தது போல எனது காதலுக்குப் வைரவர் நாயின் உருவில் உதவிக்கு வந்தாரோ? என்று தெருவிலே விழுந்து கிடந்த புத்தகங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கும்போதும் மனசுக்குள் யோசித்தேன். பொறுக்கிய புத்தகங்களை அப்படியே எடுத்து வந்து அவளிடம் கொடுத்தேன். வாங்கிக் கொண்டாள், நன்றி சொல்லவில்லை. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரியாத அதிர்ச்சி நிலையில் அவள் இருந்தாள்.

'ஆர் யூ ஓகே..?' என்று வினாவினேன்.

கனவுலகிலிருந்து கலைந்து 'ஓம்' என்று என்னை நிமிர்ந்து பார்த்துத் தலை அசைத்தவள், மீண்டும் மெல்லத் தலை குனிந்தாள். அதுவே அவள் அழகிற்கு அழகு சேர்த்தது.

சற்றே தலை குனிந்தாள், சாமி!
இவளழகை
எற்றே தமிழில் இசைத்திடுவேன்?
கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக்
கூறுவனோ?
மீள விழியில் மிதந்த
கவிதையெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?

ஏக்கப் பெருமூச்சு விட்டபடி மெதுவாக எழுந்து வீதியைத் திரும்பிப் பார்த்தபடியே வீடு நோக்கி நடந்தாள். என்னைத்தான் திரும்பிப் பார்த்தாளோ அல்லது திரும்பவும் தன்னை அந்த நாய் துரத்தலாம் என்ற பயத்தோடு திரும்பிப் பார்த்தாளோ தெரியவில்லை. அவளுக்கு சற்றுமுன் நடந்ததை நினைத்துப் பயம் இருந்திருக்கலாம். நாய் துரத்தாவிட்டாலும் என் மனம் அவளைப் பின்னால் துரத்திக் கொண்டே சென்றதை அவள் அறிந்திருக்க நியாயமில்லை. ஏக்கப் பார்வையோடு அவள் பிரிந்தபோது, பாரதி கண்ட கனவுகளை எனக்குச் சொந்தமாக்கி, அவளிடம் கண்ட அந்த ஆளை விழுங்கும் அழகை எனக்குள் மென்று சுவைத்துப் பார்த்தேன். நான் நானாக இல்லை என்பதை என்னை விட்டு அவள் பிரிந்த அக்கணமே நான் உணர்ந்து கொண்டேன்.

அவள் என்னைவிட ஒரு வகுப்பு மேலே படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிச் சீருடையில் கூட்டமாக மாணவிகள் போகும்போது மற்றவர்களைவிட அவள் மட்டும் வித்தியாசமாய் என் கண்களில் பட்டாள். தினமும் எத்தனையோ பெண்களைப் பார்த்தாலும், என்னைக் கவரக்கூடிய ஏதோ ஒருவித கவர்ச்சி அவளிடம் இருந்திருக்கிறது. அதுதான் என் மனம் நேரகாலம் தெரியாமல் அவளைத் துரத்தித் திரிகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். அவள் கல்லூரி சீருடையில் மட்டுமல்ல எந்த உடையிலும் சிரித்த முகத்தோடு அழகாகவே இருந்தாள். அந்த நிகழ்வின்பின் என்னைக் கண்டால் ஒரு புன்சிரிப்புடன் தலை குனிந்து கொள்வாள். பெண்மையின் நளினம் அவளது ஒவ்வொரு அசைவிலும் வெளிப்படுவதைத் தினமும் அவதானித்தேன். எனக்குள் மெல்ல மெல்லக் காதலை வளர்த்துக் கொண்டேனே தவிர காதலைச் சொன்னதில்லை. சொல்ல நினைத்தாலும் விலாங்கு மீன் போல நழுவிக் கொண்டேயிருந்தாள்.

ஒருநாள் படிப்பதற்கு ஏதாவது கதைப்புத்தகம் இருக்குமா? என்று வலிய வந்து கேட்டாள். கிடைத்த சந்தர்ப்பத்தை ஏன் நழுவவிடுவான் என்று குறிஞ்சிமலர் நாவலை அவளிடம் கொடுத்தேன். படித்துவிட்டு மிகவும் அருமையான நாவல் என்று வர்ணித்தாள். ஏன் என்று வினாவினேன். அதில் வரும் கதாநாயகனின் பெயர் தனக்கு மிகவும் பிடித்த பெயர் என்றாள். அதன்பின் எங்களிடையே புத்தகப் பரிமாறல் அடிக்கடி தொடர்ந்து கொண்டிருந்தது.

நாட்டின் போர்ச் சூழல் காரணமாக நாங்கள் பயந்து பயந்தே தினமும் வாழ வேண்டி வந்தது. ஒருநாள் எங்கள் ஊரை நோக்கி இராணுவம் திடீரென முன்னேறுவதாகச் செய்தி வந்தது. நாங்களும் எங்கே போவது என்று தெரியாமல் அவசரமாக இடம் பெயர்ந்தோம். உயிர் வாழ ஆசைப்பட்டு ஆளுக்கொரு திசை நோக்கிச் சென்றதால் அவளை நான் மீண்டும் சந்திக்கவில்லை. நான் புலம் பெயர்ந்து வெளிநாடு வந்திருந்தேன்.

(18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# வாளெடுத்தவன் வாளால் சாவான்



பல நாள் கள்வன் ஒருநாள் அகப்படுவதுண்டு. இந்தக் கள்வனும் அப்படித்தான். பல நாள் திருவிளையாடலின் பின்னர் உயிரைப் பறிகொடுத்திருக்கிறான்.

தென்னாபிரிக்காவின் குஷரூகர் தேசியப் பூங்கா வனவிலங்குகளுக்கு பிரசித்தமானது. அழியும் பல காட்டு மிருகங்களை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டு வருபவர்கள் இவர்கள். ஆனால் இங்கேயும் களவு வேட்டைக்காரர்கள் தொல்லை விட்டபாடாக இல்லை. இந்தப் பூங்காவிற்கு சமீபத்தில் ஒரு பெரிய சிங்கப் பண்ணை இருக்கின்றது. நீண்ட காலமாக இங்கு பல சிங்கங்களைக் கொன்றுவந்த ஒரு கள்ள வேட்டைக்காரன், சிங்கக்கூட்டமொன்றுக்கு இப்போது விருந்தாகி இருக்கிறான். பல சிங்கங்கள் ஒன்றாக இணைந்து, தமக்குக் கிடைத்த இரையை கடித்துக் குதறி, கிழித்து, தப பசிக்கு உணவாக்கி இருக்கின்றன.

தலையைத் தவிர, அநேகமாக அவனுடைய உடல் உறுப்புகள் எல்லாம் சிங்கங்கள் வயிற்றுக்குள் போய்விட்டன என அதிகாரிகள் கூறுகிறார்கள். இவன் தலை கிடந்த இடத்தில், அவனது வேட்டைத் துப்பாக்கியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவன் ஊர், பேர் பற்றிய விவரம் இன்னமும் கண்டறியப்படவில்லை. கடந்த வருடம் இந்தப் பண்ணையில், பல சிங்கங்கள் விஷம் கொடுத்து கொல்லப்பட்டிருந்தன. சிங்கங்களின் உடல் உறுப்புகள், மருத்துவ தேவைக்காக கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு வாங்கப்பட்டு வருவது காரணமாகவே, இவை களவாகக் கொல்லப்படுகின்றன.

சிங்கங்களைப் போன்று இப் பிராந்தியங்களில் காண்டா மிருகங்களையும் அவற்றின் கொம்புகளுக்காக கொன்று வருகிறார்கள். சீனா, வியட்நாம் மற்றும் பல ஆசிய நாடுகளில் இவற்றின் கொம்பு மருத்துவ தேவைகளுக்காக, பெரிய விலை கொடுத்து சந்தையில் வாங்கி வருகின்றார்கள். வாளெடுத்தனுக்கு வாளால் சாவு என்று சொல்லப்படுவதுண்டு. சிங்கங்களைக் கொன்றவனுக்கு சிங்கங்களாலேயே சாவைத் தேடியுள்ளான்.

# ஆபத்து அழைக்கிறது



பயணம் செய்கிறேன் என்ற பெயரில் ஆபத்தை விலைக்கு வாங்கி விடாதீர்கள் என்று எச்சரிக்கும் அதிகாரிகள், ஆபத்து அதிகமான நாடுகளைப் பட்டியலிடுகிறார்கள். பாதுகாப்பு விடயத்தில் 149 புள்ளிகளைப் பெறும் முதலாவது ஆபத்தான நாடாக மத்திய ஆபிரிக்க குடியரசை இந்த அமைப்பு தெரிவு செய்திருக்கின்றது. 2003இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சிக்குப் பின்னர், இந்த நாடு மிக ஆபத்தான ஒன்றாக மாறியிருப்பதாக இவர்கள் கூறுகிறார்கள். ஆயுதமேந்திய புரட்சிப் படையினரின் பிரசன்னம், மிக மோசமான அளவில் இடம்பெறும் குற்றச் செயல்கள் என்று பொதுவாகவே இங்கு நீதி நியாயம் மரணித்துக் கிடக்கின்றது என்கிறார்கள். வன்முறைச் சம்பவங்கள், பழிவாங்கும் கொலைகள்,

பொருட்களைச் சூறையாடுதல், மனித உரிமைகள் ஏறி மிதிக்கப்படுதல் போன்றவற்றிற்கு இங்கு பஞ்சமில்லை என்கிறார்கள். இரண்டாவதாக வருவதும் ஓர் ஆபிரிக்க நாடு தான். ஹொங்கோ ஜனநாயக் குடியரசுதான் இந்த நாடு.


# கடலுக்குள் தாயான பெண்

அம்மாவாவது அற்புதம்... அதிலும் கடல் நீரின் அடியில் அம்மாவாவாவது அதிசயம். எகிப்தை ஒட்டிய செங்கடலில் நீச்சலடிக்கப் போன ஒரு பெண், தண்ணீருக்குள் குழந்தையைப் பெற்றெடுத்து பலரையும் ஆச்சரியப்படுத்தி இருக்கிறார். எந்தவொரு ஆற்றுநீரும் கலக்காத கடல் செங்கடல் என்பதால், இதன் நீரில் உப்புச் செறிவு அதிகம்.

ரஷ்யாவிலிருந்து ஒரு சுற்றுலாப் பயணியாக இங்கு கணவனுடன் வந்தவள், பிக்கினி உடையுடன் கடலுள் இறங்கிய போதுதான் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இவளுடன் இவள் கணவனும், நீருக்கடியில் குழந்தைப் பேறு மருத்துவத்தில் நிபுணருமான ஒரு ரஷ்ய மருத்துவரும் இருந்தபடியால், "எல்லோமே நலமாக" முடிந்துள்ளன.

கரையில் நின்ற வேறு உல்லாசப் பயணி ஒருவர் நிகழ்ச்சிகளைப் படமாக எடுத்துள்ளார். பிறந்த பிள்ளை ஆணா, பெண்ணா என்பது பற்றிய விவரமும், அதன் ஆரோக்கிய நிலை பற்றிய விவரமும் அறியப்படவில்லை.

ருஷ்ய மொழி பேசும் மருத்துவரும் கூட இருந்தமையால், இந்தப் பிள்ளைப்பேறு முற்கூட்டியே திட்டமிட்டு அரங்கேறி இருக்கவும் வாய்ப்புண்டு. பணவசதி மிக்க ஒரு ஜோடி , முன்னேற்பாடாக மருத்துவரையும் கூடவே அழைத்துக் கொண்டு வந்து, செங்கடலில் பிள்ளையைப் பெற்றிருக்கலாம்.



# தையல் நூலில் கைவண்ணம்



வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது சரிதான். சொல்வேனியா நாட்டு கலைஞரான சஸோ கிராஞ் என்பவர், தையல் நூல் கொண்டு அற்புதமான ஓவியங்களை உருவாக்கி அசத்தியிருக்கின்றார். இதை ஒரு வட்டவடிவமான மரச் சட்டத்திற்குள் அடக்கியிருக்கிறார்.

ஒருவரது முகத்திலுள்ள இலட்சணங்களை, படமெடுத்தாற்போல இவர் வெகு நுணுக்கமாக தையல் நூல் கொண்டு வெளிப்படுத்தி இருப்பது, பார்ப்போரை பிரமிக்க வைத்திருக்கின்றது.

அலுமினியம் அல்லது மரத்தாலான ஒரு வட்ட வடிவான சட்டத்தை எடுத்து, அவற்றின் ஓரங்களில், நீட்டாக உலோக ஆணிகளைப் பொருத்துகிறார். பின்பு ஒரு நூல் பந்தை எடுத்து ஆணிகளில் கட்டி, ஆயிரம் வரையிலான. கோடுகளை இழுத்து, தான் விரும்பும் முகபாவத்தைக் கொண்டுவரும்வரை தொடர்கிறார்.

கணினியில் பல வருடங்கள் கிரபிக் வடிவமைப்பாளராகவும், மென்பொருள்,வலை மேம்பாட்டாளராகவும் இவர் பல வருடங்கள் பணியாற்றி இருக்கின்றார். நேர் கோடுகள் இவருக்கு என்றுமே சவாலாக இருந்துள்ளன. நேர்கோடுகளை வைத்து கலை நயம் மிக்க ஓவியங்களை உருவாக்க வேண்டும் என்ற வெறியில் பிரசவித்தவைதான் இந்தத் தையல் நூல் ஓவியங்கள்.!!!

# அவன் விரல் சூப்பியபடியே இறந்து கிடந்தான்





அவனை நான் தூக்கும் போது விரல் சூப்பியபடியே இறந்து கிடந்தான். நாளை சங்கரின் நினைவு நாள். ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு அவன் ஒரு அழையா விருந்தாளி! எப்ப வருவான் எப்ப போவான் என்றே தெரியாது. இன்று அவன் இல்லாவிட்டாலும் அவனை நான் தூக்கும்போது விரல் சூப்பியபடியே இறந்து கிடந்ததே நினைவில் நிற்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் சங்கரைப் பற்றி எழுதியிருந்தேன். அதனை இங்கே பதிவிடுகிறேன்.

நாங்கள் இரட்டைவாய்க் காலில் இருக்கும் போதுதான் அந்த துயரச்சம்பவம் நடந்தது. இரட்டைவாய்கால் பகுதியில் தான் ஈழநாதம் இயங்கிக்கொண்டிருந்தது. ஏப்ரல் மாதம் நடுப்பகுதி இருக்கும். அன்று காலை வீட்டிலிருந்து ஈழநாதத்திற்கு சென்று கொண்டிருந்தேன். 300 மீற்றர் சென்றுக்கொண்டிருக்கும் போது எனக்கு பின்னே ஒரு எறிகணை வீழ்ந்து வெடித்தது. நானும் அதை பெரிது படுத்தவில்லை. பல எறிகணைகள் என்றால் வீழ்ந்து படுக்கலாம் ஒரு எறிகணைதானே என்று நான் போய்விட்டேன். எமது பணிமனையில் இருந்து நானும் செல்வராசா அண்ணையும் எறிகணை வீழ்ந்த பகுதிக்குச் சென்றோம். அது எங்கள் வீட்டிற்கு கிட்டிய தூரத்தில் எறிகணை வீழ்ந்து வெடித்திருந்தது. நாங்கள் அவ்விடத்திற்கு செல்ல சங்கரின் அம்மா கதறி அழுதுகொண்டு இருந்தா "ஐயோ சுரேன் விரல் சூப்பிக்கொண்டே செத்து போனான். ஏன்ர கடவுளே உள்ளே பாருங்கோ" என்று சங்கரின் அம்மா கதறி அழுது கொண்டிருந்தா.

சிறிய தரப்பாள் கூடாரத்திற்குள் சங்கர் கவுண்டு படுத்திருந்தான். அவன் செத்த மாதிரி தெரியேல்ல. கிட்ட போய் அவன் சேட்டோடு சேர்த்து தூக்கினேன். சூப்பிய விரல் கீழே விழுகிறது. ஏனக்கு கவலையாகக் கிடந்தது. அவனுக்கு சின்ன வயதிலேயே விரல் சூப்பிற பழக்கம் இருக்கு. அவன் அதை நிறுத்தவில்லை. அவனுக்கு நான் பல தடவை வாயில சுண்டுவன். அப்பிடி இருந்தும் அவன் விரலை சூப்பிற பழக்கத்தை விடவில்லை. அவனை அவன்ர தம்பி கோபம் வந்தால் 'சூப்பி' என்று பட்டப்பெயர் சொல்லி அழைப்பான். அவன்ர அப்பா என்னோடு நல்லமாதிரி. ஈழநாதத்திற்கு அருகில் தான் அவர்களின் வீடு இருந்தது. அவர்களின் வீட்டில்உள்ள பலாப்பழம், மாம்பழம், கொய்யாப்பழம் எல்லாம் நாங்கள் சாப்பிடுவம். சங்கர்தான் கொண்டு வந்து தருவான்.

அவ்வன் பாடசாலை முடிந்தவுடன் உடுப்பு மாற்றாமலே ஈழநாதத்திற்கு வந்துவிடுவான். ஏனெனில் அவனுக்கு கிரிக்கெட் என்றால் பைத்தியம். "அங்க உள்ள பழைய பேப்பர்களில் வரும் படங்களை எடுத்து சேகரிப்பது தான் அவனும் பொழுது போக்குகளில் ஒன்றாக இருக்கும்." ஈழநாதத்திற்கு யார் வந்தாலும் வாசலில் உள்ள காவலாளி அனுமதி பெறவேண்டும். ஆனால் அவன் வந்தால் யாரும் ஒன்றும் பேசமாட்டார்கள். அவனும் ஈழநாதத்தோடு ஒன்றித்து போனான். எல்லாரோடும் அன்பாக பழகுவான். ஆனால் அவனின் விரல் சூப்பும் பழக்கம் தான் அடிக்கடி திட்டும் வேண்டுவான். அவனுக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் மட்டுமல்ல. கிரிக்கெட் தொடர்பான பல விடயங்கள் அவனுக்கு தெரியும். ஏனெனில் அவனில் மூத்தவர்கள் கூட அவனிடத்தில் கிரிக்கெட் தொடர்பாக கேட்பார்கள்.

அடிக்கடி பார்க்கும் அந்த முகம் அன்றைக்கு அசைவற்று கிடந்தது என்னால தாங்க முடியவில்லை. அவனுக்கு இரண்டு அக்காவும் ஒரு தம்பியும். சங்கரும் தம்பியும் வேறுவேறு விதமான குழப்படிகாரன்கள். எப்படி குழப்படி செய்தாலும் அவர்களின் தந்தை பாசத்தோடு அழைத்து வருவார். இவர்கள் இருவருக்கும் சண்டையும் வரும். இவ்வாறு ஒருநாள் தகப்பன் இறந்தால் யார் கொள்ளி வைப்பது என்ற வாக்குவாதம் இடம்பெற்றது. இதில சங்கர் சொல்லியிருந்தான் "எட நான்தான் மூத்தவன் நான் தானே கொள்ளி வைக்க வேண்டும்" என்று. ஆனால் தம்பி "நீ என்ன சொல்லுறாய் எனக்கும் அவர் அப்பா தானே நான் தான் கொள்ளி வைக்க வேண்டும்" என்று இருவருக்கும் வாக்குவாதம் முற்றி இருவரும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தார்கள்.

"வாசலில் சிறிய கிடங்கு ஒன்றை கிண்டி." அதை தெரியாத அளவுக்கு மறைத்து விட்டு தந்தை வரும் வரைக்கும் கதவ்க்கு பின்னால் ஒளித்து இருந்தார்கள். அவர்களின் நினைப்பு தந்தை வந்து அந்த கிடங்கில் தடக்கி விழுவார் என நினைத்தே அவ்வாறு செய்தார்கள். ஆனால் உந்துருளியில் செல்லும் போதே இவங்கள் ஏதோ செய்திருக்கிறாங்கள் என்று நினைத்துக்கொண்டு கிடங்கிக்கு அருகால் அவர் செல்லவும் மறைந்திருந்த இவர்கள் " எட தப்பிட்டார்ரா" என்று குரல் கொடுத்தார்களாம். இதை இவர்களின் தந்தையே வந்து எங்களிடம் சொல்லி சிரிப்பார். அவ்வளவுக்கு இவர்கள் தந்தையோடு நகைச்சுவையாகப் பழகுவார்கள்.

அன்று அவனின் இழப்பு அவனின் குடும்பத்திற்கு பெரிய இழப்பு தான். என்னால அதை விளங்க முடிந்தது. ஆனால் என்ன செய்ய முடியும். வீழ்கின்ற ஒவ்வொரு எறிகணையும் பல உயிர்களை குடித்துக்கொண்டுதான் இருந்தது. எறிகணைத்தாக்குதல் இடம்பெறும்பொழுது அவனது அம்மாவும் கடைசித்தம்பியும் முகம் கழுவுவதற்காக சென்று விட்டார்கள். இவன் நித்திரையாகக்கிடந்தவன். நித்திரையோட அவன் போய்விட்டான். அவனுக்கு சாவின் வேதனை தெரிந்திருக்க வாய்பில்லை என நினைக்கின்றேன்.

தலை ஒரு பக்கமும் கையின் ஒரு பக்கமும் சிதைந்துவிட்டது. அவனின் தந்தை அன்று காலை நிவாரணம் எடுப்பதற்கு சென்று விட்டார். அவர்கள் அந்த இடத்திற்கு முதல் நாள் தான் வந்திருந்தார்கள். பதுங்குகுழி இன்னும் அமைக்கவில்லை. பதுங்குகுழி அமைப்பதற்கான பொருட்கள் பொக்கணையில் இருக்கிறதெனவும் அதோடு நிவாரணம் எடுக்கவும் போய்விட்டார் என சங்கரின் அம்மா எனக்குச் சொல்லிருந்தார். உடனே நானும் செல்வராசா அண்ணையும் சங்கரின் உடலை தூக்கி கொண்டு எனக்கு தெரிந்த ஒரு வீட்டில் வைத்தோம். இதற்கிடையில் எனது நண்பர்களும் வந்துவிட்டார்கள். உடனே சங்கர் வழமையாக போடும் ஜீன்சும் சேட்டும் அவனின் பாக்கிக்குள் இருந்து எடுத்துக்கொண்டுபோய் அவனை சுத்தம் செய்து அவனுக்கு உடுப்பை மாற்றினோம். மாற்றிவிட்டு நான் அவனின் தந்தை சென்ற இடத்தை நோக்கிச் சென்றேன்.

அம்மா சொன்ன இடத்தில் அவர் இல்லை. அவர்களின் உறவினர்களுக்கும் நான் எதுவும் சொல்வில்லை. அருகில் சங்கக்கடைக்கு போயிட்டார் அவசரம் என்றால் அங்க போய் பார்க்கலாம் என்று அவர்கள் சொன்னார்கள். நான் சங்கரின் அப்பாவிடம் போய் "அண்ணை வீட்டில ஷெல் விழுந்துவிட்டது. சங்கர் செத்துவிட்டான்." "மற்ற ஆக்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை" என்று சொன்னேன். உடனே தந்தையை ஏற்றிக் கொண்டு சங்கரின் உடல் வைத்தி ருந்த வீட்டிற்கு போனோம். எறிகணை வீழ்ந்து அவர்களின் கூடாரம் சிதைந்து விட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)

■ ஜெயராணி




மேற்கத்திய நாடுகளில் ஒருவரைக் கண்ணுக்குக் கண் பார்த்துவிட்டால், உடனே “ஹலோ’ என்று புன்னகைப்பார்கள். அது அவர்களின் பண்பாடு. கண்ணுக்குக் கண் பார்த்துவிட்டு, புன்னகைக்காமல் போனால் நீங்கள் அவரை அவமரியாதை செய்ததாக அர்த்தம். பேச்சு வந்துவிட்ட குட்டிக் குழந்தைகளும் இதைப் பின்பற்றுகின்றன. ஆனால், நாமோ சக மனிதரைப் பார்த்தால் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொள்கிறோம். எதிரில் யாரேனும் நம்மைப் பார்த்துப் புன்னகைத்தால், சட்டெனப் பின்னால் திரும்பிப் பார்ப்போம். “யார் இவர், எங்கே பார்த்தோம், நம்மைப் பார்த்து ஏன் சிரிக்கிறார், பதிலுக்குச் சிரித்தால் தப்பாகிவிடுமோ, இல்லை இந்த ஆளு லூசோ” என ஆயிரத்தெட்டுக் கேள்விகளால் அலைக்கழிக்கப்படுவோம். ஒரு சிரிப்புக்கு இத்தனை அக்கப்போரா?

நாமே இப்படி இருக்கும்போது குழந்தைகள் என்ன செய்யும்? சக மனிதரைப் பார்த்தால் பயப்படுகின்றன, ஓடி ஒளிகின்றன அல்லது அவமரியாதை செய்கின்றன. “எல்லா மனிதரும் நம்மைப் போன்றவர்களே” என்ற அடிப்படையான வாழ்வியல் தத்துவத்தை, சமத்துவக் கல்வியை நாம் குழந்தைகளுக்குத் தர மறுக்கிறோம். சிவப்பே அழகு, கறுப்பு அசிங்கம் என்ற தவறான புரிதல் குழந்தைக்கு எங்கே இருந்து வந்தது? பாடசாலையில் ஆசிரியரும், அங்கே பணிபுரியும் துப்புரவுப் பணியாளரும் ஒரே மாதிரியாக மதிக்கப்பட வேண்டியவர்கள் இல்லை என, குழந்தை எப்படி நினைத்துக்கொள்கிறது? இருவருமே சம்பாதிக்கிறார்கள், அன்பு செலுத்துகிறார்கள் என்ற நிலையிலும் அம்மாவைவிட அப்பா உயர்ந்தவர் என்ற எண்ணத்தைக் குழந்தைக்கு விதைத்தது யார்? மனிதர்களின் தோற்றம், செய்யும் வேலை, நிறம், பாலினம், மொழி, சாதி, மதம் போன்றவற்றை வைத்து மரியாதையைக் கூட்டவும் குறைக்கவும் குழந்தைக்கு யார்தான் கற்பிக்கிறார்கள்?

ஒவ்வொரு நாள் காலையும் நம் வீடுகளில் குப்பைகளைச் சேகரிக்க துப்புரவுப் பணியாளர் வண்டியைத் தள்ளிக்கொண்டு வருவார். அவரைப் பற்றிய நமது மதிப்பீடு என்ன? அண்மையில் நடந்த சம்பவம் இது. தன் மகனிடம் குப்பைப் பையைக் கொடுத்துவிட்டார் ஒரு தந்தை. அவன் “அங்கிள்” எனக் கத்திக்கொண்டே ஓடினான். திரும்பி வந்தவுடனே முதுகில் டம்மென்று ஒரு போடு போட்டு, ‘குப்பை பொறுக்குறவனை அங்கிள் என்று கூப்பிடுற, அறிவில்ல உனக்கு” என்றார். அவன் “பின்ன எப்படியப்பா கூப்பிடுறது?” என்றான். “குப்பை என்று கூப்பிடு போதும். நீ ஓடாத, அவனே வருவான்” என்றார். இன்னொரு நாள் என் கீழ் வீட்டில் இருக்கும் பெண்மணி, துப்புரவுப் பணியாளர் மேல் தளத்திற்கு வர முற்பட்டதற்காக நாயை அவிழ்த்துவிட்டார்.

ஒவ்வொரு மனிதருக்கும் மூன்று விதமான வாழ்க்கைகள் உள்ளன, அவை முறையே தனிப்பட்ட வாழ்க்கை (Personal life), பொருளீட்டும் வாழ்க்கை (Professional life), சமூக வாழ்க்கை (Social life). தனக்கான உறவு மற்றும் நட்புகளுடன் பொழுதைக் கழித்து மகிழ்ந்திருக்கும் தனிப்பட்ட வாழ்வில் நாம் எந்தக் குறையும் வைப்பதில்லை. நம் தனிப்பட்ட வாழ்வின் தேவைக்காகப் பொருளீட்டும் வாழ்க்கையிலும் நாம் சமரசம் செய்து கொள்வதில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தத் தலைமுறை பொருளீட்டத்தான் உயிர் வாழ்கிறது. குடும்பத்துடன் நேரம் செலவிடுவதுகூட அதற்கு இரண்டாம்பட்சம்தான். மூன்றாவதான சமூக வாழ்க்கை என்றால் நமக்கெல்லாம் என்னவென்றே தெரியாது. சமூக வாழ்க்கை என்றதும் போராடக் கூப்பிடுகிறார்களோ எனக் கற்பனை செய்துவிடாதீர்கள். கொடி பிடித்துக் கொண்டு வீதிக்கு வர அழைக்கிறார்களோ என நினைத்துவிடாதீர்கள். இச்சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் சமூக வாழ்க்கையைப் புறக்கணித்ததால்தான் வெகுசிலர் எப்போதும் கொடி பிடித்துக் கொண்டிருக்க நேரிடுகிறது!

இந்த பூமியில் நீங்கள் மட்டும்தான் வாழ்கிறீர்கள் என்றால் தனிப்பட்ட மற்றும் பொருளீட்டும் வாழ்க்கை மட்டும் போதுமானது. ஆனால், இரண்டாவதாக இன்னொரு மனிதர் வந்துவிட்டாலே அங்கே சமூக வாழ்க்கைக்கான தேவை உருவாகிவிடுகிறது. நீங்கள் அவரோடு நல்லிணக்கம் கொள்ள வேண்டும். கிடைக்கும் அனைத்தையும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சண்டையில்லாமல் நிம்மதியாக வாழ முடியும். இல்லையெனில் போட்டி,அதிகரித்து, யார் பெரியவர் என மல்லுக்கட்டி யாராவது மற்றவரை வீழ்த்தி ஜெயிக்க வேண்டி வரும். நாமெல்லோரும் அப்படித்தான் நம் சக மனிதர்களை வீழ்த்துவதையே முழுநேர வேலையாகக் கொண்டு சமூகத்தின் அமைதியைக் கெடுத்துவிட்டோம்.

தனிப்பட்ட மற்றும் பொருளீட்டும் வாழ்க்கையை மட்டும் ஒருவர் வாழ்கிறார் எனில் அவர் சுயநலவாதி.

## குழந்தையிடம் சமூகப் பொறுப்பை வளர்த்தெடுக்க சில வழிமுறைகள்!

1. தானம் என்றாலே பழையதைக் கொடுப்பதே நம் வழக்கம். அதற்கு மாறாக, புதிய ஆடைகள், புத்தகங்கள், பொம்மைகள், பொருள்களை வாங்கி ’தேவைப்படும்’ மற்றொரு குழந்தைக்குப் பரிசளிக்கப் பழக்கப்படுத்துங்கள். தன் பென்சிலைத் தோழிக்குக் கொடுத்து உதவினேன் என்று சொல்லும் பிள்ளையைப் பாராட்டுங்கள். இந்தப் பழக்கம், “கொடுத்து மகிழும்” பண்பை வளர்த்தெடுக்கும்.

2. குழந்தையின் நண்பர்களுக்குள் ஏற்றத்தாழ்வு பார்க்காதீர்கள். குழந்தையின் நண்பர்கள் ஒரே அந்தஸ்தில் இருக்கும் பட்சத்தில் வெவ்வேறு சமூகப் பின்னணியைச் சேர்ந்த புதிய நண்பர்களை அறிமுகம் செய்யுங்கள். அவர்களுடன் விளையாடுவது, வரைவது, பாடுவது, படிப்பது போன்ற செயல்களைச் செய்யட்டும்.

3. வார இறுதியில் தியேட்டர்களுக்கு அழைத்துப் போவதற்கு பதிலாக, இயற்கை சூழ்ந்த இடங்கள், வனவிலங்குச் சரணாலயங்களுக்குக் கூட்டிச் செல்லுங்கள். இன்றைய குழந்தைகளுக்கு இந்த பூமியில் மனிதர்களைத் தவிர வேறு உயிர்கள் இருக்கின்றனவா என்பதே தெரியாது! உயிர்கள் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் உயிர்ச்சங்கிலியைப் புரிய வையுங்கள்.

4. பொருள்களைக் குறைவாகப் பயன்படுத்தப் பழக்குங்கள். கிழிந்த துணியைத் தைத்துப் போடுவது, உடைந்த பொருளை ஒட்டிப் பயன்படுத்துவது, மறு சுழற்சி, மறு பயன்பாடு ஆகியவற்றைக் கற்பியுங்கள். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் இந்த பூமியில் வளங்களைச் சுரண்டியே உற்பத்தி செய்யப்படுகிறது என்பதால் அவற்றின் மதிப்பைச் சொல்லிக்கொடுங்கள். பணம், தண்ணீர், மின்சாரம் எல்லாவற்றையும் சிக்கனமாகச் செலவழிக்கச் சொல்லித் தாருங்கள். சிக்கனத்தைக் கற்ற குழந்தை ஒரு போதும் வாழ்க்கையில் சிரமப்படாது.

5. எல்லோருக்கும் மரியாதை அளியுங்கள். உங்களைப் பார்த்து குழந்தையும் அதைப் பின்பற்றும். காய்கறி விற்பவர், துப்புரவுப் பணி செய்பவர், வீட்டு வேலை செய்பவர் எல்லோரையும் சமமான மரியாதையோடு நடத்துங்கள். குழந்தை தவறிழைத்தால் உடனே திருத்துங்கள்.

6. செய்தியிலோ, நிகழ்ச்சிகளிலோ நன்மை செய்பவர்கள் பற்றி குறிப்பு வந்தால் மனதார வாய்விட்டுப் பாராட்டுங்கள். அவர் என்ன நன்மை செய்தார் என்பதைக் கதையாகச் சொல்லுங்கள். சமூகத்திற்கு நன்மை செய்பவர்களே உண்மையான கதாநாயகர்கள் என்று எடுத்துரையுங்கள். குழந்தை அப்படியொரு ஹீரோவாகக் கனவு காணத் தொடங்கும்.

7. சுற்றுலாக்களை விடவும் பயணங்களுக்குத் திட்டமிடுங்கள். புதிய மனிதர்களை அறிமுகம் செய்வதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள்.

8. உங்கள் இரத்த சொந்தங்களைக் கடந்த நண்பர்களுடனான நிகழ்வுகளுக்கும் பயணங்களுக்கும் திட்டமிடுங்கள். சமூகக் கலப்பை இயல்பாகப் பழக்குங்கள்.

9. உங்கள் நம்பிக்கை என்னவாக இருந்தாலும் உண்மையை மட்டுமே பேசுங்கள். யாரைக் குறித்தும் குழந்தையிடம் தவறாகப் பேசி வெறுப்பு உணர்வை விதைக்காதீர்கள்.

10. நீதிக்கதைகள் சொல்லுங்கள்.

# நெடுந்தீவு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொல்லியல் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இத்தீவு விவசாயம், கால்நடை, கடல்வளங்களுடன் உள்ளது. இங்குள்ளவர்கள் தங்கள் காணிகளின் எல்லையாக மதில்களுக்கு பதிலாகக் கற்களை வேலியாக அடுக்கி வைக்கிறார்கள். கற்களின் இடையே இடைவெளி எதுவுமின்றி இந்தக் கல்வேலி அமைக்கப்படும். ஆனாலும் நவீனம் இந்தக் கல்வேலிகளை அழித்து வருகின்றது. இன்று கல்வேலிகளை சிறப்பாக அமைக்கும் திறன்பெற்றவர்கள் அருகி விட்டார்கள்.

1813 ஆம் ஆண்டு நெடுந்தீவு கடலில் இருந்து புறப்பட்ட ஹீர்த்ட் லோலோ (Hearth Depolo) எனும் ஐக்கிய அமெரிக்க இளைஞன் இத்தீவின் அழகையும் வளங்களையும் மனதில் கொண்டு இது தனி ஒரு நாட்டுக்குச் சொந்தமல்ல. இந்த பிரபஞ்சத்துக்கே சொந்தமானது என்றார்.

போர்த்துக்கேயர் காலம்




தொட்டு ஆங்கிலேயர் காலம் வரையான அந்நியர் ஆட்சிக்கு முன்னர் நெடுந்தீவு ஒரு சுதந்திர தனி இராச்சிய நாடாகவே விளங்கியது. இங்கு ஒல்லாந்தர் கால ஆட்சியின் சின்னமாக "குயிந்தா" என்ற இடத்தில் கலங்கரை விளக்கம் அமைந்துள்ளது. Queen Tower என்பதன் திரிபே "குயிந்தா" என்பதாகும். குதிரை வளர்ப்பதற்கு சிறந்த இடமாக இத்தீவு காணப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரேபியா, பேரிசியா முதலிய நாடுகளிலிருந்து குதிரைகள் கவர்களின் மூலம் வருவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. இவை குதிரைப் பந்தயத்துக்கு ஆங்கிலேயர்களால் பயன்படுத்தப்பட்டன. இங்கே குதிரை லாயங்களும், குதிரை குளிப்பாட்டுத் தொட்டிகளும் காணப்படுகின்றன.

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையிலான கடற் பயணத்தின் நடு நிலையமாக இத்தீவு திகழ்ந்தமையால் போர்த்துக்கேயர் இங்கு பெரியதொரு கோட்டையைக் கட்டியதோடு கத்தோலிக்க மதம் பரப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். ஒல்லாந்தர் இத் தீவை டெல்வ்ற் (DELFT) என்று பெயரிட்டு அழைத்தார்கள். இன்றும் ஆங்கிலத்தில் இத்தீவு இப் பெயராலேயே அழைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவு வடக்குத் தெற்காக 6 கிலோ மீற்றர் அகலத்தையும் கிழக்கு மேற்காக 8 கிலோ மீற்றர் நீளத்தையும் கொண்ட ஒரு சரிந்த இணைகர வடிவில் 30 கிலோ மீற்றர் சுற்றளவையும், 48 சதுர கிலோ அங்குலத்தில் உள்ளது. இங்குள்ளவற்றில் கட்டைக் குதிரைகள், பெருக்குமரம் (கி.மு.7 ஆம் நூற்றாண்டு) என்பன சிறப்புமிக்கவையாகும். இவ்வாறாக பழம் பெருமை வாய்ந்த வரலாற்றுப் பூமியாக மண்வாசனை கமழும் பெயராக நெடுந்தீவு திகழ்ந்து வருகின்றது.

# அவன்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்ப அவர்களுக்கு தேவை சங்கரை அடக்கம் செய்யவேண்டும். ஆளுக்கு ஆள் எல்லாரும் கதைக்கிறார்கள். சங்கரின் அப்பா என்ர முகத்தை பார்த்தார்.

எனக்கு விளங்கி விட்டது. சங்கரை அடக்கம் செய்யவதற்கான அனைத்து வேலைகளையும் நானும் சுகந்தன் அண்ணையும் அன்ரனியும் தர்சனும் அருகில் உள்ள சுடலைக்குச் சென்றோம். அங்கே அடக்கம் செய்வதற்கு கிடங்கை வெட்டினோம். எமது சமய முறைப்படி இறந்தவரின் உடலை எரிப்பது தான் வழமை. ஆனால் அந்த நேரத்தில் சமைப்பதற்கு விறகு கூட எடுக்கமுடியாது எப்படி எரிப்பது. அதற்காகவே எல்லாருமே இறந்தவர்களின் உடல்களை புதைப்பார்கள். நாங்கள் கிடங்கு வெட்ட மூன்று அடியில் தண்ணி ஊற ஆரம்பித்துவிட்டது. இனி தண்ணி அள்ளி அள்ளி இன்னும் ஒரு அடி வெட்டினோம். பின்னர் சங்கரை அந்த கிடங்கிலேயே புதைத்தோம். சங்கரை அடக்கம் செய்வதற்கு அருகில் நின்ற நண்பர்கள் சுகந்தன், அன்ரனி, தர்சன் ஆகியோர் இறுதி நாட்களில் இறந்துவிட்டார்கள். அவனது அக்காவும் கிபிர் தாக்குதலில் இறந்ததாக எனது நண்பர்கள் தெரிவித்தார்கள். நாட்கள் நகர நகர இருப்பதற்கே இடமின்றி இறந்தவர்களை புதைக்கமுடியாது இறந்த இடத்திலேயே கைவிட்டு விடவேண்டிய சூழலும், கைவிடப்பட்ட பதுங்குகுழிகளுக்குள் போடவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

நினைவுப்பகிர்வு யுத்தகால வன்னி ஊடகவியலாளர் - சுரேன்

நன்றி: பதிவு

# காவிரி....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் இதைக் கணக்கில்கொள்வதில்லை. டெல்டாவை உருவாக்கியது இந்த வண்டல். இங்கு ஓடும் 36 நதிகளில் 18 கடலை அடையும். மற்றவை வண்டலின் விசிறிப் பரப்பில் சுவர்ந்துவிடும். 26 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள வாய்க்கால்கள் வண்டலைக் கடத்திக் கடத்தி காவிரிக் கரையை உயிர்ப்போடு வைத்திருந்தன.

வண்டல் படிவதால் படுகை உருவாகும், குறைந்து காணாமலும் போகும். படுகையை இடித்தும் சேர்த்தும் இடம் வலமாகப் புரண்டு காவிரி தன் போக்கை மாற்றிக்கொள்ளும். ஆறு புரண்டுவிடுவதால் ஒரே கிராமம் ஆற்றுக்கு இக்கரையிலும் அக்கரையிலுமாக இருப்பதுண்டு. இந்த வண்டல் காவிரிக் கரைக்கு வாலிபத்தின் வனப்பைக் கொடுத்தது. நீருக்கு மேல் வண்டலை வைத்துக்கொண்டால் நம் உரிமையைச் சரியாக வடிவமைக்கிறோம். ஆனால் நாம் நீரை மட்டும்தானே கேட்கிறோம்!

பாசன அமைப்பை அந்தந்தக் கிராமமே பராமரிக்கும் அக்கறையும் இப்போது மறைந்துவிட்டது. வரத்து குறைந்து முறைப்பாசனம் வந்தது. இதனால், ஒவ்வொரு கிராமத்திலும் கடைமடைப் பகுதி ஒன்று உருவாகி அது இளைத்துக்கொண்டிருக்கிறது. நீரின் அளவு குறைந்தது என்பதைவிட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் நாம் அதிகம் அஞ்ச வேண்டியவை இரண்டு உண்டு. ஒரு பெருநகரின் குடிதண்ணீர்த் தேவை நதிநீர்ப் பங்கீட்டுக்கு ஒரு அடிப்படையானது ஒன்று. இங்கு நாம் எதிர்பாராத வகையில் ஒரு நியாயவியல் கோட்பாடு உருவாகி அழுத்தமாகியுள்ளது. அந்த நகரின் தேவை அதிகரிக்கும்போதும் இதே கோட்பாடு பின்பற்றப்படுமானால் விளைவு என்ன என்பதை நாம் ஊகிக்கலாம். இரண்டாவது, மனித நாகரிகத்தைப் பற்றியது. ஒரு நீராதாரத்துக்குப் பெருநகரின் குடிதண்ணீர்த் தேவையும் விவசாயத் தேவையும் போட்டி. மனித நாகரிகத்தின் வளர்ச்சி பெரு நகரங்களைப் பெருக்கும். இதை நிறுத்தித் திருப்ப முடியாது.

நாகரிக வளர்ச்சி என்பது விவசாயத்துக்குப் பகைதானா? விவசாய வளர்ச்சி என்றால் ஒரு போகத்தை இரண்டு போகமாக்குவது, அதை மூன்றாக்குவது, ஆண்டுக்கு ஆண்டு உற்பத்தி அதிகமாவது என்ற வளர்ச்சி தொடர்பான நமது மன வரைவு ஒரு உட்பகை. வருமானம் பெருக வேண்டும். ஆனால், விவசாயம் ஆதாயத்துக்காகத்தானா? காவிரி என்பது நீர் மட்டும்தானா!

நன்றி : தி இந்து

# மீள விழியில்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவளும் அப்படியே ஏதாவது வெளிநாட்டிற்குப் போயிருக்கலாம் என்று என்னைச் சமாதானப் படுத்திக் கொண்டு மறைமுகமாக அவளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.

மின்னஞ்சல்கள் தினமும் நிறைய வந்து குவிந்து கொண்டிருக்கும். இலவசம் என்பதால் விரும்பியவர்கள் எல்லாம் திக்கெட்டில் இருந்தும் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். வேண்டாதவற்றை அழிப்பதே மிகவும் சிரமமாக இருக்கும். அன்றும் ஆர்வம் காரணமாக நண்பன் ஒருவன் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றைத் திறந்து பார்த்தேன்.

வன்னியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பிரதி பெறுபவளின் பக்கம் என் கவனம் திரும்பியது. அவளேதான், இயக்கப் பெயராக இருக்கலாம் பெயர் மட்டும் மாற்றப்பட்டிருந்தது. அப்படி என்றால் அவள் அங்கேதான் இருக்கிறாளா? இது எப்படிச் சாத்தியமாயிற்று, ஒரு நாயைக் கண்டு பயந்து அந்த ஓட்டம் ஓடியவள், துப்பாக்கி ஏந்துவாளா? என்னால் கடைசிவரை நம்பமுடியாமலே இருந்தது. தமிழர் வாழ்ந்த நிலமெல்லாம் இராணுவத்தால் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கப்பட்டது. யுத்தம் ஓய்ந்து வன்னி நிலம் பறிபோனபோது அவளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. எந்த ஒரு செய்தியும் அவளைப் பற்றிக் கிடைக்கவில்லை.

தினமும் வரும் திடுக்கிடும் செய்திகளைக் கேட்கும்போதும், படங்களைக் காணொலிகளைப் பார்க்கும்போதும் அவளை நினைத்து என் மனம் வேதனையில் தடுமாறும்.

மாவீரர் தினத்திலன்று ஒவ்வொரு முறையும் மலரஞ்சலி செய்யும் போது என்கண்கள் பனிக்கும். கார்த்திகைப் பூக்கள் சூடுவதற்கல்ல, அர்ப்பணிப்பதற்கே என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் அர்ப்பணிக்கும் அந்த மலர்கள் நிச்சயமாக அவளுக்காக இருக்கக்கூடாது என்று ஒவ்வொரு தடவையும் என்மனம் சுயநலமாய் நினைக்கவைக்கும்.

ஏனோ இம்முறை மட்டும் மலர் வைக்கும்போது என்னை அறியாமலே குலுங்கிக் குலுங்கி அழுதேன். அன்று காணொளியில் பார்த்த அந்தக் காட்சி என்னை மீண்டும் மீண்டும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உறைய வைத்திருந்தது. யாருக்காக அவள் தன்னுயிரைத் தந்தாள்?

**மண்மீது கொண்ட காதலால்**
**மண்ணின் மானம் காக்கத்**
**தன்னையே தந்த அவளது அந்த**
**மீள விழியில் மிதந்த வலியெல்லாம்**
**சொல்லில் அகப்படுமோ?**

# ஆரிட்டைச் சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## ஐயரும், பூசையும் பரிகாரமும், நகைநட்டும்

இப்ப இரண்டு மூண்டு நாளைக்கு முன்னம் ஊருக்குப் போயிருந்த சமயம் அம்மாவின்ரை துவசம். அதுக்கு ஐயருக்கு அரிசி சாமான் குடுத்திட்டுவருவம் எண்டு மனுசி சொன்ன ஆலோசனைப்படி கோவிலுக்குப் போனம். மனுசி நல்ல கைக்குத்தரிசியாப் பாத்து வெண்டி காய் பிஞ்சும் கணக்கா வேண்டிக் கொண்டு ஓட்டோ ஒண்டைப் பிடிச்சுக் கொண்டு போனால், கோயிலடியிலை சனத்தை அவ்வளவாக் காணேல்லை. இரண்டு மூண்டு பேர் அர்ச்சனை செய்ய எண்டு வந்திருந்தினம். ஐயர் அவையளை கவனிச்சுக் கொண்டிருந்தார்.

எங்கடை முறை வந்த உடனை ஏன் நிக்கிறியள்? எண்டு ஐயர் கேட்டார். இண்டைக்கு அம்மான்ரை துவசம் எண்டன். அது குடுக்கத்தான் வந்திருக்கிறம் எண்டு மனுசி சொன்னாள். "உங்கடை அம்மான்ரை துவசம் இப்ப வராதே?" எண்டபடி ஐயர் மனுசியைப் பாத்தார். அது மனிசியின்ரை ஊர் எண்டபடியால் ஐயருக்கு மனுசியைத்தான் தெரியும். அதோடை மனுசி வீட்டு பிறந்த நாள், செத்த நாள் , நட்சத்திரம் எண்டு எல்லாம் அவருக்கு அத்துபடி. நான் பிறத்தி எண்ணடதாலை "இல்லை இவற்றை அம்மான்ரை துவசம்" எண்டு என்னைக் காட்டினாள் என்னுடைய மனைவியார்.

"அப்ப அங்கை போய் தட்டு இருக்கு எடுத்து ஆயத்தப்படுத்துங்கோவன்" எண்டு கருங்கல் மேடையைக் காட்டினார் ஐயர். அந்த இடத்துக்குப் போய் எல்லாவற்றையும் எடுத்துக் கழுவித் துப்பரவாக்கி தட்டில் அழகாக அடுக்கி வைச்சாப் பிறகு ஐயர் வருவர் எண்டு பாத்துக் கொண்டுகாத்திருந்தோம்.

ஐயர் வந்து எல்லாத்தையும் பாத்துக்கொண்டு தன்னுடைய வேலையைத் துவங்கினார். ஒவ்வொன்றாகச் செய்து பிண்டம் வைத்து, எள்ளும் தண்ணியும் இறைச்சு முறைப்படி தானத்தையும் பெற்றுக்கொண்டார். "திருப்தி" என்ற விடையோடை தட்சணை வைக்க வேணும். நூறு ரூபா தாள்கள் இரண்டை எடுத்தன் ஐயருக்குக் குடுக்கிறதுக்காக. என்ரை பேர்சுக் குள்ளையே தன்னுடைய கையையும் ஒட்டி எனது கைவிரல்களை நோகாமல் கிள்ளினாள். திருமணத்தண்டு மணவறையிலை தாலிகட்டினப் பிறகு மோதிரத்தைத் தண்ணிப்பானையில் போட்டு விளையாட ஐயர் விடுவார். அந்தப் போட்டியில் தோல்வியை ஏற்று மனைவியை வெல்லப் பண்ணியிருந்த ஞாபகம் வந்தது. அப்ப அவளை வெல்ல விடாட்டில் வாழ்க்கை இறுதிவரை அவள் மனதுக்குள்ளை அதை வைச்சுக் கொண்டு என்னைப் பழிவாங்கக் கூடும் எண்ட பயத்தினாலைதான் தோல்வியடைந்தேனே தவிர வீரம் இல்லாமலில்லை.. "எங்கடை ஐயாவுக்கு இந்த ஊரிலை நல்ல மதிப்பு. இரு நூறைக் குடுத்து நீங்கள் அதைக் கெடுத்துப்போடாதையுங்கோ" எண்ட படி ஒரு பச்சை நோட்டான ஆயிரத்தை உருவி ஐயரைத் திருப்திப் படுத்தினாள். "எடி என்ரை ஒரு நாள் சம்பளமெடி" எண்டு கத்த வேணும்போலை இருக்க அந்தச் சூழ்நிலையை ஒருவாறு சமாளித்துக் கொண்டேன்.

எனது மனைவி ஐயருக்கு முன்னால் வலு பயபக்தியோடை நிண்டாள். அவள் அதைப்போல எப்பொழுதும், என் முன்னால் நிண்டதாக வரலாறு இல்லை. ஐயர்தான் மனுசியோடு பேசிக் கொண்டிருந்தார்.

இப்ப ஒரு லட்சார்ச்சனை புதுசா இருபத்திரண்டு நாளைக்கு நடக்குது.குடும்ப ஒற்றுமை,குடும்பத்திலை ஐஸ்வரியம், புத்திரர் பேறு, லட்சுமி கடாட்ஷம் வரவேணும் எண்டதுக்காகச் செய்யிறம். முதல் பத்தையும் அவை பதிஞ்சு போட்டினம் எண்டு ஊரிலை உள்ள பணக்காரர் பத்துப் பேற்றை பேரை பிழை இல்லாமல் தெளிவா ஐயர் சொன்னார். "சந்தோஷம் ஐயா" என்றோம்.

அடுத்த பத்தையும் கவுண்ட் மேன்ற் உத்தியோககாரர் வைக்கச் சொல்லி, இருக்கினம் எண்டு சொல்லி ஊருக்குள்ளை அரசாங்க உத்தியோகத்திலை உள்ள பத்துப் பேற்றை பேரைச் சொன்னார் ஐயர்.

கடைசி இரண்டும் மிச்சம் இருக்கு. அதையும் கேட்டவை பாப்பம் எண்டு சொன்னான். ஏனெண்டால் சில நேரம் வழமையான உபயகாரர் கேள்விப்பட்டு வந்தால் இல்லை எண்டு சொல்லக்கூடாது எண்ட நோக்கத்திலைதான். எண்டு சொன்னார் ஐயர். விடைபெற ஆயத்தமான போது "என்ன ஒண்டும் சொல்லாமல் போறியள்" எண்டபடி எனது மனுசியினுடைய முகத்தைப் பாத்தார். " அவள் ஐயரின் கதையில் மடங்கிப்போவாள் என்று தெரிந்தபடியால் "எதுக்கு" நான் ஐயரிடம் கேட்டேன். எனக்கு ஐயர் கேக்கப்போவது என்ன என்பது தெரிஞ்சபடியால் நான் முந்திக் கொண்டேன். "என்ன ஐயா? என்னத்தைக் கேக்கிறியள்" எண்டு ஐயரைப் பாத்துக் கேட்டன். இல்லை இலட்சார்ச்சனையைப் பற்றிக் கேட்டன். நீங்கள் சத்தப்பொறுதி இல்லாமல் போறியள். அதுதான் கேட்டனான் எண்டார் ஐயர்.

எங்களுக்கு அதிலை அவ்வளவு ஆர்வம் இல்லை எண்டு மனுசியும் சொன்னாள். அதிர்ஷ்டம், ஐஸ்வர்யம், சாந்தி, சமாதானம், செய்வினை, சூனியம் எண்டு கன கதையள் ஐயர் மனுசிக்குச் சொல்லச் சொல்ல மனுசி தன்னுடைய



முடிவை மாத்தினதாயில்லை. இதைக் கண்ட எனக்கு ஒரே ஆச்சரியம். கடைசியாக "அப்ப போட்டு வாங்கோ" எண்டு சொல்லிப் பிறகும் கொஞ்சப் பிர சாதத்தைக் கையில் திணித்தார். திரும்பிப் பாக்காமல் விட்டால் போதுமெண்டு வீட்டுக்கு ஓடிவந்திட்டம்.

இப்ப பாருங்கோவன் கோயில், சமயம் எண்ட பேரிலை நடக்கிற தெம்மாடித்தனங்களை. வீட்டை வந்தாப் பிறகுதான் மனுசீட்டை கேட்டன். இது மாதிரி விசியங்கள் எண்டால் கண்ணைமூடிக்கொண்டு வேள்வி ஆடு தலையாட்டிற மாதிரி ஆட்டிறனி இண்டைக்கு ஏன் உந்தப் பிடிவாதம் பிடிச்சனீ எண்டு. அதுக்கு அவள் என்ன சொன்னவள் தெரியுமே? உந்த ஐயருக்குக் கையிலை கடிச்சுதெண்டால் உப்பிடியான யாகத்தை அல்லது பரிகாரத்தை செய்வாராம். இல்லாட்டி அவற்றை பெடி பெட்டையள் ஏதாவது ஆசைப்பட்டுக் கேட்டால் உடனை ஐஸ்வர்ய யாகம், அதிஷ்ட யாகம் எண்டு என்னென்னவோ யாகத்தைச் செய்வராம்.

சமயத்தைச் சந்தைப் படுத்திறதிலை ஆள் வலு கொட்டிக் காரனாம். இல்லாட்டி ஒரு கை ஏஸ், ஒரு ஸ்கூட்டி, ஒரு பெரிய ஆம்பிளையள் ஓடுற ஹொண்டா எண்டு எத்தினை வாகனங்கள் வீட்டு முத்தத்திலை நிக்குது. அதோடை இரண்டு லுமாலா சுப்பர், சைக்கிள். மனுசீன்ரை கையிலையும் கழுத்திலையும் ஒரு முப்பது - நாப்பது தேறுமாம். அப்ப அவையின்ரை திட்டத்துக்குள்ளை மாட்டுப்படுறதுக்கெண்டு ஒரு கூட்டம் ஊரிலை இருக்கினம். அதுக்கை அவற்றை அவியல் செல்லுபடியாகிறது பொம்பிளையளிட்டைத்தான். பூசை, பண்ணாரம் எண்டு பெண்டுகளிட்டைத்தான் அவை கதைச்சு ஒப்பேற்றிறது. ஆரேன் பூசை கட்டினவை வராட்டி அவைக்கு-சுட்ட வடை யையோ இல்லாட்டி அவிச்ச மோத கத்தையோ எடுத்துப் பிரிச்சு நிற்கிற அவையிட்டைக் குடுப்பர் ஐயர். அவை நினைக்கிறது ஏதோ ஐயர் கரிசனையிலைதான் தாறார் எண்டு.

ஐயற்றை அரசியலைக் கண்டு பிடிக்கிறது கஷ்டம். அதுக்கு நீங்கள் பிரத்தியேகமாகப் படிப்பொண்டு படிக்க வேணும். சமயம் எண்ட பேராலை நடக்கிற இது மாதிரியான அட்டூழியங்களை ஆரிட்டைச் சொல்லி அழ?

### மாவைக்கு...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரிவரியுடன் அவரை அட்வான்ஸ் லெவல் சோதனைக்கு அனுப்பியது தப்பல்லவா? அது சாத்தியமா? அதை தமிழ் மக்கள் எப்படிப் பார்ப்பார்கள் என்று கூட நீங்கள் சிந்தித்துப் பார்க்காதது வேதனையே!

தற்போது "முதல்வர்" என்ற கனவு மெய்ப்பட வேண்டிப் பல விடயங்களை உடனடியாகச் செய்தாக வேண்டும். தங்கள் கட்சியை சீராக்க வேண்டிய கடற்பாட்டில் நீங்கள் உள்ளீர்கள். அதைச் செய்வீர்களாயின் எல்லாம் தங்களைத் தேடிவரும். நீங்களாக முயற்சிக்க வேண்டாம். பாரதி பாடியதைப் போலத் தங்களது "கனவு மெய்ப்பட வேண்டும்" என்பதுதான் எமது விருப்பம். இல்லை என்று நீங்கள் அடம்பிடித்தால் நாங்கள் என்ன செய்வது? குதிரையைக் குளத் தடிக்கு ஓட்டிச் செல்லத்தான் எங்களுக்கு முடியுமே தவிர, குடிக்க வேண்டியது குதிரைதானே? பொறுத்திருந்து பார்ப்போம். என்ன நடக்கப் போகுதென்று? நல்லது நடக்குமாயின் நாங்கள் தங்களுக்குத் தோளோடு தோள் கொடுத்துத் துணை நிற்போம். இல்லை என்றால்...?

கை எடுத்து வேண்டிக்கொள்ளுங்கள். "எல்லாம் வல்ல மாவைக் கந்தன் துணை நிற்கவேண்டும்" என்று!

இப்படிக்கு
கட்சித் தொண்டன்
**அமுங்குப்பிடி அம்பிகைபாகன்**

### சவாலுக்கு...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல்லமைக்கு விடுத்த சவால் பலமான அடித்தளத்தைக் கொண்டது என்பதை மட்டுமின்றி,மாற்று அணி ஒன்றுக்கான மக்களின் தேவையை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. அப்படியானயொரு உறுதியான கொள்கைப்பற்றுள்ள, தனிநபர் நலன்களைப் புறமொதுக்கி எமது உரிமைப் பிரச்சினையை முன்னிறுத்திச் செயற்படும் ஒரு மாற்று அணி உருவாகுமா, அதற்கு முதலமைச்சர் தலைமை கொடுப்பாரா என்பதும் சந்தேகமே.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டபோது, எழுக தமிழ் நிகழ்வுகளின்போது மக்கள் வழங்கிய பேராதரவையும் சரியாக முன்னெடுத்துச் சென்று அதை ஒரு பலமாகக் கட்டியெழுப்புவதில் முதலமைச்சரோ ஏனைய பங்காளிகளோ அக்கறை காட்டவில்லை. வளர வேண்டிய அந்த அமைப்பு செயலிழந்து போய்விட்டது. மாகாண சபையிலும் சரி, தமிழ் மக்கள் பேரவையிலும் சரி, ஆதரவுச் சக்திகளை ஒன்றிணைத்து முன் கொண்டு செல்லும் ஆற்றலோ, ஆளுமையோ முதலமைச்சரிடம் உள்ளதா என்ற கேள்விக்கு திருப்திகரமான பதிலை எதிர்பார்க்க முடியாது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்துக் கொண்டிருக்கும் தான்தோன்றித்தனமான சர்வ வல்லமைப் போக்கை உடைப்பதில் முதலமைச்சர் தொடங்கிய முன் முயற்சிக்குச் சகலரும் ஆதரவு கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 23

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

ஆனால் சிவம் எதிர்பார்த்ததுக்கு மாறாக இராணுவம் அறுத்தோடியின் மறுகரைப் பக்கமாகவே காட்டுக்குள் இறங்கியது. அப்பகுதியில் போராளிகள் பத்துப் பேர் மட்டுமே நின்றனர். உடனடியாகவே சிவம் அவர்களை பின் வாங்கி ஆரம்பத்தில் நின்ற பகுதியில் பதுங்கி நிலையெடுத்து தாக்கும்படி கட்டளையிட்டான். வேட்டுச் சத்தங்களிலிருந்து இராணுவம் முன்னேறுவது தெரிந்தது. தங்களுக்கு நேரே இராணுவம் வந்ததும் தனது அணியை அறுத்தோடியைக் கடந்து மறுபுறக் காட்டுக்குள் இறக்கினான்.

மரங்களுக்குப் பின்னால் நிலையெடுத்த அவர்கள் படையினரைப் பக்கவாட்டில் தாக்கத் தொடங்கினர். ஒரே நேரத்தில் முன்புறமிருந்தும் பக்கவாட்டிலும் தாக்குதல் வரவே இராணுவத்தினர் நிலைகுலைய ஆரம்பித்துவிட்டனர். போராளிகளின் ஒவ்வொரு சூடும் ஒவ்வொரு படையினரை வீழ்த்துவது அவர்களை கிலி கொள்ள வைத்துவிட்டது. அவர்கள் இறந்தவர்களையும் காயப்பட்டவர்களையும் தூக்கிக் கொண்டு காப்புச் சூடு கொடுத்தவாறே பின்வாங்க ஆரம்பித்தனர்.

சில மணி நேரம் வெடியோசைகளாலும், குண்டுச் சத்தங்களாலும் அதிர்ந்த காடு அமைதியடைந்துவிட்டது. போராளி வில்லவன் வீரச்சாவடைந்துவிட்டான். மாயவன் படுகாயமடைந்து விட்டான். வேறு இருவருக்குப் படுகாயம். இரு தடிகளை வெட்டி அதில் ஒரு சாரத்தைக் கொழுவி ஸ்டெச்சர் போல செய்து அதில் வில்லவனின் வித்துடலையும் அதுபோன்ற இன்னொன்றில் மாயவனையும் சிவம் முகாமுக்கு அனுப்பி வைத்தான். சிறு காயப்பட்ட போராளிகள் முதல் உதவி செய்து கட்டுக்களைப் போட்டுவிட்டு தாங்கள் சண்டையில் நிற்பதாகக் கூறிவிட்டனர். தூரத்தில் வானத்தில் "ரோண்" சத்தம் கேட்க ஆரம்பித்து.

ஒரு போராளி, "அண்ணை.. வண்டு.. வருகுது" என்றான்.

சிவம், "உடனை செத்துக் கிடக்கிற ஆமிக்காரரின்ரை சடலங்களை பத்தையளுக்கை மறையுங்கோ.. கண்டால் நாங்கள் இஞ்சை தான் நிக்கிறம் எண்டு தெரிஞ்சு கிபிர் வந்து பொழியத் துவங்கியிடுவான்", என்றான்.

இராணுவத்தினரின் சடலங்களை மறைப்பது அவ்வளவு சிரமமான காரியமாகவே இருக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே உருமறைப்பு செய்திருந்ததால் குழைகளைப் போட்டே அவர்களை மறைக்கத்தக்கதாக இருந்தது. எப்படியிருந்த போதும் அங்கு நிற்பது புத்திசாலித்தனமல்ல என நினைத்த சிவம் தனது அணியை வெகு அவதானமாக மறைவான பாதைகளால் பின்னகர்த்தினான். அரை மணி நேரத்துக்கு மேலாக வேவு விமானம் சுற்றிக் கொண்டிருந்தது. எதையும் அது கண்டுபிடிக்கவில்லைப் போலவே தோன்றியது. வேவு விமானங்கள் வானத்தை விட்டு அகன்று சில நிமிடங்களிலேயே இரு கிபிர் விமானங்கள் வந்து காட்டின் மீது குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தன. கரும்புகை மண்டலங்கள் திரள்திரளாக மேலெழுந்தன.



சிவமும் போராளிகளும் தங்களுள் சிரித்துக் கொண்டனர். ஏனெனில் குண்டுகள் அவர்கள் நின்ற இடத்திலிருந்து ஏறக்குறைய அரைக் கிலோமீற்றர் தூரத்தில் விழுந்து கொண்டிருந்தன. நேரம் மூன்று மணியைத் தாண்டியபோது வோக்கி இயங்க ஆரம்பித்தது. சிவம் தொடர்பை ஏற்படுத்தினான். காட்டுக்குள் இறங்கிய இராணுவம் பெரும் இழப்புடன் பின்வாங்கிவிட்டதாகவும், சிவத்தின் அணியினரை முகாமுக்குத் திரும்பும்படியும் கட்டளை பீடத்திலிருந்து அறிவித்தல் வந்தது.

அனைவரும் முகாமை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். வில்லவனின் வீரச்சாவு சிவத்தின் நெஞ்சைப் போட்டு நெருடிக்கொண்டிருந்தது. வில்லவன் இருக்குமிடம் எப்போதுமே கலகலப்பாயிருக்கும். புதுப்புது விதமான குழப்படிகள் செய்து அவன் அடிக்கடி "பணிஸ்மென்ற்" வாங்கத் தவறுவதில்லை. அவனும் அவற்றைப் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. அவன் எவ்வளவுதான் தொல்லை கொடுத்தாலும் தளபதி முதல் எல்லோரும் அவனை விரும்பினர். அவன் ஒரு கிளி வளர்த்தான். சண்டைக்குப் போகும் நேரம் தவிர அது அவனை விட்டுப் பிரிவதேயில்லை. அதற்கு அவன் பேசக் கற்றுக் கொடுத்திருந்தான். வில்லவன் இல்லாத போது யாரும் அதுக்குக் கிட்டப் போனால், உடனே அது, "வில்லவன்.. எங்கை?", எனக் கேட்கும்.

விளையாட்டாக யாராவது, "அவன் வீரச்சாவு", என்று சொன்னால், அது "பொய்.. பொய்.." என்று விட்டு சுற்றிச் சுற்றிப் பறக்கும்.

இப்போ முகாமுக்கு போனதும் கிளி, "வில்லவன் எங்கை?", எனக் கேட்டால் என்ன செய்வது என நினைத்த போது சிவத்தின் நெஞ்சு மெல்ல நடுங்கியது. வில்லவனின் வித்துடல் முகாமுக்குக் கொண்டு வரப்பட்டபோது "வோக்கி" அருகில் இருந்த தளபதி உடனடியாகவே எழுந்து வந்தார். அருகில் வந்த அவர் எவரிடமும் எதுவுமே பேசாமல் அவனுக்கு அஞ்சலி செலுத்தினார். அவர் அவனது குறும்புகளுக்காக அவனுக்கு அடிக்கடி சிறு தண்டனைகள் கொடுத்த போதிலும் அவரும் அவனில் ஒருவித பாசம் வைத்திருந்தார்.

வழக்கமாக "வில்லவன் எங்க?" எனக் கத்தும் அவனின் கிளிகூட அமைதியாய் இருந்தது சிவத்துக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அது ஓரிடத்தில் மிகவும் சோகமாக அமர்ந்திருந்தது. வில்லவனின் வீரச்சாவை அது தனது உள்ளுணர்வால் உணர்ந்து கொண்டுள்ளதாகவே சிவத்துக்கு தோன்றியது.

"சிவம்! அரசியல்துறையைக் கூப்பிட்டு, வித்துடலைப் பாரம் குடுத்திட்டு மற்ற ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லுங்கோ", என்றுவிட்டு தளபதி தனது இடத்திற்குப் போய்விட்டார். தாங்கள் சின்னத்தம்பனைக் காட்டுக்குள் நிகழ்த்திய சாதனையைக்கூடப் பாராட்டும் மன நிலையில் அவர் இல்லையென்பதைச் சிவம் புரிந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் அரசியல் துறையினர் வந்து வில்லவனின் வித்துடலைப் பாரமெடுத்தனர். அதுவரை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த கிளி, வித்துடலை வாகனத்தில் ஏற்றுவதற்காகத் தூக்கிய போது, "வில்லவா, வில்லவா!", எனக் கத்திக் கொண்டு சுற்றிச் சுற்றிப் பறக்க ஆரம்பித்தது. அரசியல்துறைப் போராளிகள் அதைக் கண்டு வியந்து போயினர். வாகனத்தில் ஏறியதும் அனைவரும் வரிசையாக நின்று அவனுக்கு அஞ்சலி செய்தனர். கிளியும் சிவத்தின் தோளில் வந்து அமைதியாய் அமர்ந்து கொண்டது.

அஞ்சலி முடிந்து வாகனம் புறப்பட ஆரம்பித்ததும் கிளி முகாம் வாசல் கேற் தூணில் போய் அமைதியாக இருந்து கொண்டது. வாகனம் போகும் போது அதையே பார்த்துக் கொண்டிருந்த கிளி அது கண்ணிலிருந்து மறைந்ததும் வானில் பறக்க ஆரம்பித்தது. வந்த காலம் தொட்டு முகாமை விட்டு வெளியே போகாத அந்தக் கிளி எங்கே போகிறது என்பதைச் சிவத்தால் ஊகிக்கவே முடியவில்லை.

ஆனால் அதன் பிறகு அந்தக் கிளி முகாமுக்குத் திரும்பவே இல்லை.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# காவிரி வெறும் நீரல்ல



காவிரிப் படுகைக்கு என்று ஒரு ரசனை. அங்கே சிருங்காரம் சற்றுத் தூக்கலாக இருக்கும். சங்க காலத்திலிருந்து மருத நிலத்தின் அடையாளமே அதுதானே! பேசும்போது சங்கதிகளை அசட்டுத்தனமாகப் பிட்டுவைக்காமல் தொட்டுத்தான் காட்டுவார்கள். தன்னையே குறியாக வைத்துதுபோல் பிறரையும் பேசும் கேலிப்பேச்சு உண்டு. முழுத் தத்துவமாக அது முற்றாவிட்டாலும் அங்கு ஒரு தத்துவமும் உண்டு. சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டும் எளிமையில் உடம்பை உதறிவிட்டுப் போவார்கள். “இந்த ஆக்கையைச் சுட்டுப்போட்டால் என்ன?” என்று தன் உடம்பிலிருந்தே விலகி நின்று அதைச் சபித்துக்கொள்வார்கள்.

வயிற்றுக்கு மட்டுமே சோறிட்டு வளர்க்கவில்லை காவிரி. இப்படி ஒரு சிந்தனைக் கலாசாரத்தையும் வளர்த்திருந்தது. அது பண்பாட்டுப் படைப்புகளான இலக்கியத்துக்கும், கலைக்கும் ஊற்று. காவிரி சென்றுகொண்டிருக்கும் வறட்சிப் பாதையைப் பார்க்கையில் ஒரு அச்சம் ஏற்படுகிறது. தண்ணீரோடு சேர்த்து இவையெல்லாமும் காணாமற் போய்விடும்?

**கலாசாரப் பிளவு**

பேச்சுவாக்கில், “ஆற்றங்கரை மரமும் அரச வாழ்வும்” என்று சொன்னேன். கேட்டுக்கொண்டிருந்தவருக்குப் புரியவில்லை. ஆற்றுப் படுகையை ஆறு அரித்து ஓடும்போது அங்கே இருப்பது அரச மரமானாலும் விழுந்துவிடும். இன்று அரசனாக இருப்பவன் நாளையே அடிமையாகக்கூடும். சொற்கள் புரிந்திருந்தாலும் அவரால் விளங்கிக்கொள்ள முடியாததற்குக் காரணம், சிந்தனைக் கலாசாரத்தில் வந்த இடைவெளி. ஆற்றங்கரை அரச மரம் அவர் பிரக்ஞைக்கு அந்நியம்.

சங்க இலக்கியமான நற்றிணைப் பாடல் ஒன்று மருதத்தின் வளத்தைப் பற்றியது. அறுவடை முடிந்தது. தாளை மடக்கி உழுது மறுபடியும் விதைக்க விதை கொண்டுசென்றார்கள். விதைத்துவிட்டு கூடைகளில் மீனைப் பிடித்துக்கொண்டு மீண்டார்கள் என்று பாடல். வழியிலிருந்த குட்டைகளில் மீன் பிடித்தார்கள் என்றுதான் இதைப் புரிந்துகொள்கிறார்கள். வயலிலேயே மீன் கிடப்பதை அன்றைய காவிரிக் காலத்தில் பார்த்திருக்கிறேன். வயலில் மீன் கிடப்பது இன்றைய பிரக்ஞைக்கு எட்டாது. இது கால இடைவெளி அல்ல. தலைமுறை இடைவெளி அல்ல. காவிரி காலத்துத் தலைமுறை, காவிரிக்குப் பிந்தைய காலத்துத் தலைமுறை என்று ஒரு பிரக்ஞைப் பிளவு உருவாகும்.

காவிரிக் கரையில் நகரங்கள் அமைந்தன என்பது பெரிதல்ல. நகரமைப்புக்குள்ளேயே, கட்டடக் கலைக்குள்ளேயே காவிரி வந்திருந்தது. மதிலைக் காவிரி வருடிக்கொண்டு ஓட கரையில் கட்டுமலையாக இருக்கும் கோயிலடி ரெங்கநாதர் கோயிலைப்போல் இங்கு பல மாடக்கோயில்கள் உண்டு. பெருகிவரும் இடங்களிலும் காவிரியை விட்டு விலகாமலிருக்கும் ஒரு வாஞ்சை.

அங்கங்கே பரந்து நிறைத்துக்கொண்டு இந்தச் சீமையைப் புனல் நாடாக்கிக்கொண்டிருந்தது காவிரி. திராவிட நகரமைப்பின் மையமான கோயில்களில் இருந்து திருமஞ்சன வீதி ஒன்று காவிரிக்குச் செல்லும். இறைவனின் அன்றாட அபிஷேகத்துக்கு காவிரியிலிருந்து தண்ணீர் எடுத்துவருவார்கள்.

**துலாக் காவிரி**

ஆடிப்பெருக்கில் தீர்த்தவாரிக்கு எங்கள் ஊர் பெருமாள் ஆற்றுக்குச் செல்வார். காவிரி வறண்டுவிட்டதால் அண்டாவில் தண்ணீரை வைத்துக்கொண்டு ஆற்றில் தீர்த்தவாரி நடக்கிறது. ஐப்பசியில் காவிரி துலாக் காவிரியாகும். மயிலாடுதுறையில் பெருமாளுக்கும் சிவனுக்கும் துலாக் காவிரி தீர்த்தவாரி பெரிய விழா. இந்த ஆண்டு காவிரியில் வரத்து இல்லாமல் ஆழ்துளைக் கிணற்று தண்ணீரில் ஐப்பசி கடை முழுக்கு நடந்தது. ஸ்ரீரங்கம் பெருமாளுக்கு இந்த மாதத்தில் காவிரியின் அம்மா மண்டப படித்துறையிலிருந்துதான் தீர்த்தம். மற்ற மாதங்களில் அவருக்குத் தீர்த்தம் கொள்ளிடத்திலிருந்து வரும். துலாக் காவிரி என்று ஒரு காவிரி இனி வருமா?

மாசி மகத்தன்று எல்லாக் கோயில்களிலிருந்தும் சுவாமி குளத்துக்கோ - காவிரிக்கோ சென்று தீர்த்தவாரி நடக்கும். கெட்டி மேளம் கொட்ட காளை வாகனத்தில் சுவாமி ஆற்றில் இறங்கும்போது மக்கள் காவிரி நீரை வாரி வாரி இரைத்துக்கொள்வார்கள். கங்கையைத் தலையில் மறைத்த சிவன் காவிரியைக் காட்டிக்கொண்டு நிற்பார். இப்போது காவிரியும் மறைந்ததே!

மன்னார்குடி ராஜகோபாலனுக்கு ஆண்டுத் திருவிழாவின் இரண்டாம் நாள் புன்னை மர வாகனம். கோபிகைகளின் ஆடைகளைக் கவர்ந்துகொண்டு வேணுகோபாலனாக சுவாமி புன்னை மரத்தில் இருப்பார். விழா பங்குனி மாதம் நடக்கும். அக்கரையிலிருந்து பாமனி ஆற்றில் இறங்கி சுவாமி இக்கரைக்கு ஏறுவார்.

அவர் ஆற்றில் இறங்கி வரும்போது, “யமுனையில் நடந்த ஜலக்கிரீடையாகவே அது தோன்றும்” என்பார் எங்கள் ஊர் பிரசன்னா பாட்டாச்சாரியார். கோயில் விழாக்களில் காளை வாகனமும் புன்னை மரமும் நிஜமல்ல. காவிரி நீர் நிஜம். காவிரியின் நிஜம் மற்றவற்றையும் அப்போது பற்றிக்கொள்ளும். இனி எல்லாமே கற்பனைதானோ!

தியாகராஜரின் இசை நாடகம் ‘நௌகா சரித்திரம்’. அதில் வரும் கிருஷ்ண லீலை யமுனையில் நடப்பதாகக் கற்பனை. நாடகத்தை இயற்றியவர் காவிரிக் கரையில்தான் வாழ்ந்தார். அதற்கும் மேற்கே வரகூர் நாராயண தீர்த்தரின் கிருஷ்ண லீலா தரங்கிணியில் துவங்கி, மெலட்டூர் பாகவத மேளா, ஊத்துக்காடு வேங்கட கவியின் பாடல்கள், மாயவரம் கோபால கிருஷ்ண பாரதியின் ‘நந்தனார் சரித்திரம்’ வரை காவிரிக் கரையில் பிறந்தவை. காவிரிக் கரையில் இனி கற்பனை பிறக்குமா?

ஆடிப்பெருக்கில் புதுத் தம்பதிகள் மண மாலைகளைக் காவிரியில் விடுவதற்கு நீரில்லை. தமிழ் இலக்கியத்தின் புதுநீராடல் பின்னணியில் இதைப் பார்க்க வேண்டும். அப்போது காஞ்சியிலிருந்து, நெல்லையிலிருந்து இராமநாத புரத்திலிருந்து மக்களைக் காவிரிக் கரை ஈர்த்துக்கொண்டது. இங்கிருப்பவர்களே இன்று வெளியிடங்களுக்குச் சென்றால்தான் பிழைக்கலாமோ?

காவிரியில் நீர்வரத்து குறைந்ததால் இங்கு இயற்கைச் சூழலின் வலைப்பின்னல் குலைந்துபோன கோலமாயிற்று. குளம், குட்டைகளில் ஏற்றிவைத்த விளக்காகப் பூக்கும் அல்லி, தாமரை, நீலோத்பலத்தைக் காணவில்லை. சேறே இல்லாதபோது சேற்றில் நடக்கும் உம்பளச்சேரி மாடும் இல்லை என்றானது.

**வண்டலை விட்டுவிட்டோமே!**

அப்போது காவிரியில் வந்தது நீர்மட்டுமல்ல. வளத்தைக் கொடுக்கும் வண்டலும் வந்தது. உச்ச நீதிமன்றம் வழங்கும் நீர் வந்தாலும் வண்டல் வராது. வழியில் வண்டலைத் தடுத்துக்கொள்ளும் அத்தனை அணைகள், தடுப்பணைகள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 8

# மாற்றம்

## ஏழைகளின் மாற்றம்

**பொ**ழுது போக்கென்று கண்டால் அரட்டை அடிப்பதுதானே பொதுவான விடயம். ஒன்றில் பொதுவாக ஒரு விடயத்தை எடுத்துக் கதைப்பது. இல்லாவிடின் தமக்குள்ளே இருக்கும் ஒருவரை சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது. அல்லது நேரத்தை விரயமாக்கி எழுந்து போவது என்ற் கோட்பாட்டோடு இல்லாமல் ஒரு இளைஞர் குழாம் சமுதாய நன்மை கருதி புதிய சிந்தனையோடு தொழிற்பட்டு சமூகத்திற்கு புதுவிதமான சிந்தனையையும், மாற்றத்தையும் கொடுத்திருக்கிறது.

இது நடைபெற்றது இந்தியாவின் தமிழ்நாட்டில். இந்தியாவின் பிரபல நிறுவனங்களில் பணியாற்றுகின்ற மனிதவள மேம்பாட்டைத் தமது தொழிலாகக் கொண்ட அதிகாரிகள் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டனர். சதாகாலமும் தாம் சந்திக்கின்றபோது சமூகத்தைப் பற்றிய சிந்தனையாளர்களாகத் தாம் இருந்ததே அதற்குக் காரணம் என்கின்றனர் அவர்கள்.

உதாரணத்திற்குத் தாம்பரம் புகைவண்டி நிலையத்தில் கடலை விற்பவர் சுகுணா. அவர் அவரது ஐந்து வயது வரையும் சாதாரணமானவராக இருந்தவர். அவருக்கு, ஆறாவது வயதில் அம்மை நோய் தாக்கியது. கண்களின் பார்வையை இழந்துவிட்டார். இருந்தும் விடாமுயற்சியால் வாழ்க்கையை ஓட்டிச் சென்று கண்களில் ஒளியற்ற இன்னொருவரைக் கணவராகக் கரம் பற்றிக் கொண்டார். இதன் பயனாக இரண்டு குழந்தைகள். வாழ்க்கை நெடுகிலும் பல்வேறு துயரங்களை எதிர்கொண்டபடி தவித்துக் கொண்டிருந்த சுகுணாவை "மாற்றம்" உறுப்பினர்கள் சந்தித்துக் கொண்டனர். தற்போது சுகுணா ஒரு சர்வதேசப் பாடசாலை ஒன்றில் தமிழ் ஆசிரியையாகப் பணிபுரிகிறார். ஐந்திலக்கத்தில் சம்பளம் பெறுபவராகத் தனது வாழ்க்கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார். இப்படி போகப் போக்கிடமில்லாத, விரகத்தியின் விளிம்பில் நின்று தவித்துக் கொண்டிருந்த பலரின்·வாழ்க்கையை மாற்றிப் பிரகாசப்படுத்தியிருக்கிறது மாற்றம் பௌண்டேஷன்.

மொத்தம் பத்து பேர் கொண்ட மத்திய குழுவிற்கு மாற்றம் பற்றிய சிந்தனையுடன் மாற்றத்தைத் தொடங்கிய சுஜித்குமார் தலைமைப் பொறுப்பை ஏற்று மாற்றத்தை வழி நடத்துகிறார். அவர்களுக்கு பன்னிரண்டு பேர்கொண்ட குழுவொன்று ஆலோசகர்களாகச் செயற்படுகின்றது. இதனாலேயே இந்த சமூக மாற்றம் நடைபெறுகிறது.

**மாற்றம் என்ன சமூக மாற்றத்தை செய்கிறது?**

முதலாவது வருடத்தில் வெறும் முப்பது மாணவர்களே எமது நிறுவனத்தின் பயனாளிகளாக இருந்தனர். 2013 வரை மொத்தம் 480 மாணவர்கள் பயனடைந்தார்கள். 2017 வரை 337 மாணவர்கள் உயர் கல்வி கற்கின்றனர். 2017 ஆம் ஆண்டு மட்டும் 200க்கும் மேற்பட்ட மாணவர்களைத் தத்தெடுத்திருக்கிறது மாற்றம் பௌண்டேஷன் என்று சொல்கிறார். சுஜித்குமார் ஒரு தொழில்சார் மனித வள மேம்பாட்டாளர். அவரது பயிற்சிப் பட்டறைகளில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பங்குபற்றுவதைக் காணலாம். அத்தகையதொரு புலமை




சார்ந்தவரினால் மாற்றம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பெற்றோர் இல்லாத படிக்க வசதி அற்ற மாணவர்களை தேர்வு செய்து தமிழகத்தில் உள்ள அதி உன்னதமான கல்லூரிகளில் முற்றிலும் இலவசமாகப் படிக்க வைக்கிறார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் ஒருவரை மிகவும் நம்பகமான ஆலோசகராக நியமித்து அவர்களுக்கு ஆலோசனைகள் சொல்லி வழிநடத்துவதோடு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் கொடுத்து தகுதியோடு வளர்த்தெடுக்கிறார்கள். படிப்பு முடிந்ததும் அவர்களது முனைப்பிலேயே பெரும் நிறுவனங்களில் பணியையும் பெற்றுத் தருகிறார்கள், மாற்றத்தின் அரவணைப்புடன் பயணிப்பவர்கள் பலர்.

சுஜித்குமார் சர்வதேச நிறுவனத்தின் உயர்பதவியில் இருப்பவர் மாற்றத்தின் தலைமைப் பதவி வகிப்பது பற்றி பேசினார்...

பிளஸ் டூ படிக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டி நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு இடையே தன்னம்பிக்கையை விதைப்பது இவரது வழக்கம். இப்படி ஒருமுறை ஓரிடத்தில் பேசிவிட்டு மேடையை விட்டு இறங்கும்போது அண்ணா நீங்கள் சொன்னபடி நான் நல்லா படிச்சு நல்ல மார்க்ஸ் வாங்கிடுவேன். ஆனால் எங்கம்மா வீட்டு வேலை செய்யறாங்க அவங்களால என்னை மேற்கொண்டு படிக்கவைக்க முடியாதே? அப்ப நான் என்ன செய்யட்டும் என்று ஒரு மாணவி கேட்டிருக்கிறார். அந்த மாணவியின் கேள்வி சுஜித்குமாரை உலுக்கிவிட்டது, பிளஸ் டூ மார்க்ஸ் கைக்கு வந்த உடன் எனக்கு போன் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். நல்ல மார்க்ஸுடன் அந்த மாணவியும் மறக்காமல் போன் செய்துவிட்டார். மாணவி உயர்கல்வி படித்து முடிக்க இரண்டு லட்சத்தில் இருந்து நான்கு லட்சம் வரை படிப்பிற்கு செலவாகும், இந்த செலவை ஏற்றுக்கொள்ளும் நன்கொடையாளரை தேடுவதற்கு பதிலாக நேரடியாக கல்லூரிக்கே சென்று இலவசமாக சீற் கேட்டு விடுவது என்ற முடிவோடு ஒரு கல்லூரிக்குச் சென்று மாணவியின் நிலையைச் சொல்லி சீற் கேட்டு இருக்கிறார்.

விடயத்தைக் கேள்விப்பட்ட கல்லூரி நிர்வாகம் ஒன்றல்ல உங்களுக்கு இருபது சீற் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டனர் இப்போது மீதமுள்ள 19 சீற்றுக்குத் தகுதியான மாணவர்களைத் தேடவேண்டிய சூழ்நிலை. நண்பர்களின் துணைகொண்டு, 'மாற்றம்" என்ற அறக்கட்டளையை உருவாக்கி மீதம் தேவைப்பட்ட 19 மாணவர்களைக் கண்டுபிடித்து கல்லூரியில் சேர்த்த பிறகு சுஜித்குமாருக்கும் அவரது நண்பர்களுக்கு ஏற்பட்ட மனநிறைவிற்கு அளவேயில்லை. இதை ஏன் ஒவ்வொரு வருடமும் தொடரக் கூடாது என்று முடிவு செய்தனர், இவர்களது நல்ல எண்ணத்திற்கு மேலும் சில கல்லூரிகள் துணை நிற்கின்றன.

பிளஸ் டூ மதிப்பெண் வந்துவிட்ட இந்த சீசனில் சமூகவலைத்தளங்களில் தகவல் போடுகிறார்கள், பார்ப்பவர்களிடம் எல்லாம் இப்படி ஒரு விடயம் இருக்கிறது என்று சொல்கிறார்கள், பொறியியல் கல்லூரியில் சேர்வதற்கு 175 வெட்டுப்புள்ளிக்கு மேல் இருக்கவேண்டும். கலைக்கல்லூரியில் சேர்வதற்கு 75 சதவீதத்திற்கு மேல் மார்ஸுக்குள் இருக்கவேண்டும், பெற்றோர் ஏழைகளாக இருக்கவேண்டும்.

இந்த தகுதியின் அடிப்படையில் வரக்கூடிய விண்ணப்பங்களை நேரடியாக விசாரித்துப் பின் மாணவர்கள் விருப்பப்படி உயர்கல்வி படிக்க ஏற்பாடு செய்துவிடுகின்றனர். கடந்த நான்கு வருடங்களாக இந்த தொண்டு தொடர்கிறது. இதுவரை 337 பேர் படித்துள்ளனர். படிப்பை முடித்தவர்களில் 87 சதவீதம் பேருக்கு வேலையும் கிடைத்துவிட்டது.


இன்றிலிருந்து ஒரு பத்து நாளைக்கு ஒரு உன்னத பணிக்காக நீங்கள் இரண்டு நிமிடம் ஒதுக்குங்கள். அது என்ன பணி என்பதுதானே உங்கள் அடுத்த கேள்வி. நீங்கள் அன்றாடம் வீட்டு வேலை செய்பவர்கள், காய்கறி விற்பவர்கள், ஓட்டோ ஓட்டுபவர்கள், கார் டிரைவர்கள், பூ விற்பவர்கள், குப்பை அள்ளுபவர்கள் என்று பலரை சந்தித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

இப்படி சந்திக்கும் போதெல்லாம் ஒரு புன்னகையோடு கடந்து சென்று விடுவீர்கள். ஆனால் இன்றிலிருந்து ஒரு பத்து நாளைக்கு அப்படிச் செய்யாதீர்கள், உங்களுக்கு பிளஸ் டூ படித்து முடித்த மகனோ மகளோ இருக்கிறார்களா? அவர்களை படிக்க வைக்க சிரமப்படுறீங்களா? கவலையே படாதீங்க, இந்தாங்க ஒரு நம்பர், இந்த நம்பருக்கு போன் செய்யுங்க, மத்ததை அவுங்க பார்த்துக்குவாங்க என்று சொல்லி மாற்றத்தின் எண்ணைக் கொடுங்கள் என்கின்றனர் இந்த மாற்றம் திறனாளிகள்



விஜய் அன்ரனியின் காளி படத்துக்கு சென்னை உயர்நீதிமன்று தடை விதித்துள்ளது. விஜய் அன்ரனியின் அண்ணாதுரை படத்தை விநியோகித்ததால் 4.73 கோடி இந்திய ரூபா தனக்கு நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறி அதன் விநியோகஸ்தர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.


அண்ணாதுரை நஷ்டத்தை ஈடுசெய்ய காளி படத்தை அவருக்கு வழங்க விஜய் அன்ரனி முன்னர் ஒப்புக்கொண்டார். ஆனால், அதை இப்போது மறுத்துவிட்டார். இதையடுத்தே விவகாரம் நீதிமன்று சென்று, இப்போது படத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.




மெர்க்குரி படம் முழுக்க வசனமே பேசாமல் நடித்துள்ளார் பிரபுதேவா. இந்தப் படத்தில் முதன்முறையாக பிரபுதேவா எதிர்மறையான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இரசாயனத்தின் எதிர்வினைகளை சொல்லும் இந்தப் படத்தில் பிரபுதேவாவின் கதாபாத்திரத்தைப் பார்ப்பவர்கள் நிச்சயம் அதிர்ச்சியடைவர் எனக் கூறியிருக்கிறார் படத்தின் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ்.





பாகுபலி படத்தின் பின்னர் சரித்திர ரீதியான படங்களைப் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் விக்ரம் நடிக்கும் மகாவீர் கர்ணா 300 கோடி ரூபாவில் தயாராகிறது.

அமெரிக்க நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படம் தமிழ், ஹிந்தியில் உருவாகிறது. அத்துடன் தெலுங்கு, மலையாளத்திலும் மொழி மாற்றம் செய்து படம் வெளியாகிறது.

இயக்குநர் விமல், படத்தின் ஸ்கிரிப்டை சபரிமலையில் வைத்து சிறப்பு வழிபாடு நடத்தியுள்ளார். ஒக்ரோபரில் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

தமிழில் அறிமுகமாகும்போது "எந்தச் சூழ்நிலையிலும் கவர்ச்சி காட்ட மாட்டேன்" என நிபந்தனை விதித்தவர் ரெஜினா. இதனால் அவருக்குச் சரியாக வாய்புகள் அமையவில்லை.

ஆனால், தெலுங்கில் படுகவர்ச்சி காட்டி நடித்தார். இதனால் அங்கு முன்னணி நாயகிகளில் ஒருவரானார். இந்நிலையில் கௌதம் கார்த்திக்குடன் மிஸ்டர் சந்திரமௌலி படத்தில் ரெஜினா படு தாராளம் காட்டி நடிக்கிறார்.

பாடல் காட்சி ஒன்றில் இதுவரை தமிழில் எந்த நடிகையும் நடிக்காத அளவுக்கு கவர்ச்சி உடையில் அவர் தோன்றியுள்ளாராம்.



மறைந்த நடிகை சாவித்திரியின் வாழ்க்கையை சொல்கிறது 'மகாநதி' படம். இந்தப் படம் 'நடிகையர் திலகம்' என்ற பெயரில் தமிழில் வெளியாகிறது.

இதில், கீர்த்தி சுரேஷ் சாவித்திரியாகவும் சமந்தா பத்திரிகையாளராகவும் நடிக்கின்றனர். மே 09 ஆம் திகதி இப்படம் வெளியாகிறது.

இந்நிலையில் இந்தப் படத்தின் தனது காட்சிகளுக்கு சமந்தா சொந்தமாகவே தெலுங்கு, தமிழில் குரல் (டப்பிங்) கொடுத்துள்ளார். இதுவரை சமந்தாவின் படங்களுக்கு பாடகி சின்மயியே குரல் கொடுத்து வந்திருந்தார்.

# பார்த்தாலே பரவசம்




கடந்த வாரம் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் தொடரில் றியல் மட்ரிட் அணியும் ஜுவென்ரஸ் அணியும் மோதிய முதலாவது காலிறுதிப்போட்டியில் றொனால்டோ அடித்த பைசிக்கிள் கிக் கோலே அனைவரையும் ஆச்சரியப்படுத்தி உள்ளது. உதைபந்தாட்டப் போட்டிகளில் பைசிக்கிள் கிக் கோல்கள் அடிப்பது அரிதாகவே இடம்பெறுவதுண்டு. ஆனாலும் அத்தகைய கோல்களுக்குத் தனியான மவுசும் உண்டு. அந்தவகையில் றொனால்டோவின் உதைபந்தாட்ட வரலாற்றில் அவர் பைசிக்கிள் கிக் மூலம் கோல் அடிப்பது இது இரண்டாவது தடவையாகும். முன்னதாக 2016 ஆம் ஆண்டு 2018 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தகுதிகாண் தொடரில் லத்வியா அணிக்கெதிரான போட்டியில் போர்த்துக்கல் அணி சார்பில் அவர் இவ்வாறான கோல் ஒன்றை அடித்திருந்தார்.

சம்பியன்ஸ் லீக் போட்டியில் றொனால்டோ இந்தக்கோலை அடிக்கும் பொழுது அவரது வலது கால் தரையில் இருந்து 2.30 மீற்றர் வரை உயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச ரீதியில் சில வீரர்கள் இத்தகைய கோல்களை அடித்தாலும் இவ்வளவு தூரம் காற்றில் எழும்பி அடித்ததில்லை. அதனால்தான் றொனால்டோவின் கோலைப் பார்த்த பரவசத்தில் ஜுவென்ரஸ் ரசிகர்கள் உட்பட ஒட்டுமொத்த அரங்கமுமே சேர்ந்து எழுந்து நின்று கைதட்டிப் பாராட்டி உள்ளது.

தோல்வியின் விரக்தியில் வன்முறையில் ஈடுபடும் ரசிகர்களுக்கு மத்தியில் தமது அணி 3 : 0 என்று பின்னடைவைச் சந்தித்த தருணத்திலும் எதிரணி வீரர் அடித்த கோலுக்கு மரியாதை அளித்தது விளையாட்டுலகின் உன்னதமான தருணங்களில் ஒன்றாகும். இதனாலேயே ஜுவென்ரஸ் ரசிகர்களுக்கும் நன்றி கூறியுள்ளார் றொனால்டோ.

இது குறித்து றொனால்டோ “இவ்வாறான கோல்கள் விளையாட்டின் ஒரு பகுதி என்றாலும் நான் நீண்டகாலமாக இந்தச் சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்று அது நன்றாக அமைந்தது. இவ்வாறான கோலை அடிப்பதற்கு நான் பல்வேறு தடவைகள் முயற்சி செய்தாலும் அது தோல்வியிலேயே முடிந்தது. ஆனாலும் முயற்சி செய்ய வேண்டும். நான் முயற்சி செய்தே இந்தக்கோலை அடித்தேன். அத்தோடு நான் போர்த்துக்கல் சார்பில் அடித்த கோலை விட இந்தக்கோல் மிகச்சிறந்தது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அதிருப்தி



தற்போது அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்ற் நகரில் நடைபெற்று வரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளன. போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வந்தாலும் சில அதிருப்திகளையும் ஏற்படுத்தி உள்ளது. ஆரம்ப நிகழ்வில் 43000 ரசிகர்கள் கலந்து கொண்டமை ஒரு சாதனையாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் ரிக்கெட் எடுத்த நூற்றுக்கும் மேற்பட்ட ரசிகர்களை உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. போக்குவரத்து ஒழுங்கமைப்பில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் வாகனங்களுக்காகக் காத்திருக்க வைத்துள்ளார்கள். இதற்காகப் பின்னர் போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் மன்னிப்பும் கோரி இருந்தார்கள்.

அதுபோல இந்தப் போட்டியின் முதல் வாரத்தின் போது ஒரே நாட்டைச் சேர்ந்த மூன்று வீரர்கள் உட்பட சில வீரர்கள் திடீரென உடல் நலம் குன்றிப்போனதால் அவர்கள் ஏனைய வீரர்களிடம் இருந்து தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். அதில் 23 வயதுடைய ஒருவர் மலேரியா நோயாளியாக இனங்காணப்பட்டு வைத்தியசாலைக் கண்காணிப் பிலும் இருந்துள்ளார். அவுஸ்ரேலியாவில் மலேரியா நோய்க்கு வலுவான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் எதிர்பாராத இந்தப் பிரச்சினை போட்டியின் சுகாதார வசதிகளைக் கேள்விக்குட்படுத்தி இருந்தது.

# இடமாற்றம்




இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். போட்டிகள் நடைபெற்றுவரும் நிலையில் போட்டி அட்டவணையில் ஒரு மாற்றத்தை கடந்தவாரம் ஐ.பி. எல். நிர்வாகம் ஏற்படுத்தி உள்ளது. ஐ.பி.எல். தொடரில் பங்குபெறும் எட்டு அணிகளில் ஒவ்வொரு அணியும் இதர ஏழு அணிகளுடனும் இரண்டு தடவைகள் மோதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. சொந்த மைதானத்தில் ஒருதடவையும் மற்றைய அணிகளின் மைதானத்தில் ஒரு தடவையும் விளையாடி வருகின்றன. இந்நிலையில் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணியும் டெல்லி டேர்டெவில்ஸ் அணியும் ஏப்ரல் 21 ஆம் திகதி டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்திலும் மே 12 ஆம் திகதி பெங்களூரு சின்னச்சாமி மைதானத்திலும் விளையாட இருந்தன.

ஆனாலும் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக கர்நாடக சட்டசபைக்கான தேர்தல் எதிர்வரும் மே 12 ஆம் திகதி நடைபெறுமென தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே ஏப்ரல் 21 ஆம் திகதி டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடைபெறவிருந்த போட்டி அதே தினம் பெங்களூரு சின்னச்சாமி மைதானத்திலும் மே 12 ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவிருந்த போட்டி அதேதினம் டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்திலும் நடைபெறுமென ஐ.பி.எல். நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் அன்று நடைபெறும் போட்டியை பெங்களூரில் வேறொரு தினம் நடத்த முடியாத அளவுக்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட போட்டி அட்டவணை காணப்படுவதாலேயே மேற்குறித்த இரண்டு போட்டிகளின் இடங்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

# நூல் வெளியீடு

கடந்தவாரம் மும்பையில் இந்திய அணியின் முன்னாள் தலைவரான சௌரவ் கங்குலி எழுதிய ‘A Century is Not Enough’ நூலின் வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்வெளியீட்டு விழாவில் நூலில் உள்ள பல விடயங்கள் மலரும் நினைவுகளாகக் குறிப்பிடப்பட்டாலும், அதில் முத்தாய்ப்பாக ஒரு விடயம் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. அது 2002 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் நட்வெஸ்ட் தொடரின் இறுதிப்போட்டி தொடர்பாக வெளியிட்ட தகவல்களே. அந்தப்போட்டியில் இங்கிலாந்து நிர்ணயித்த 326 வெற்றியிலக்கை நோக்கி ஆடிய இந்தியா ஒரு கட்டத்தில் சேவாக், சச்சின், கங்குலி, டினேஸ் மொங்கியா, ராகுல் ராவிட் என முக்கிய 5 விக்கெட்டுக்களை 146 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறிய போது யுவராஜ் சிங்கும் முகமட் கைபும் இணைந்து




இந்தியாவை வெற்றி பெறச் செய்திருந்தார்கள்.

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற பொழுது பல்கனியில் நின்ற கங்குலி ஆவேசமாகத் தனது ரீ-சேட்டைக் கழற்றிச் சுற்றிய காட்சியை கிரிக்கெட் ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிடமாட்டார்கள். கிரிக்கெட் விமர்சகர்களால் அந்தச் செயல் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டாலும், இந்திய ரசிகர்களால் பெரிதும் கொண்டாடப்பட்டிருந்தது. அந்தக் கொண்டாட்டத்தின் பொழுது அருகில் இருந்த வி.வி.எஸ். லக்ஸ்மன் என நினைக்கிறேன், நான் ரீ-சேட்டைக் கழற்றுவதைத் தடுக்க அவர் முயற்சி செய்திருந்தார். ஆனாலும் அதையும் மீறிக் கழற்றி ஆவேசமாகச் சுழற்றிக் காண்பித்தேன் எனக் கங்குலி குறிப்பிட்டுள்ளார். இந்த நூல் வெளியீட்டு விழாவில் சச்சின் டெண்டுல்கர் மற்றும் ரோகித் சர்மா ஆகியோரும் கலந்து கொண்டு அந்தப்போட்டி குறித்த தமது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 14.04.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.